Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 16, 2021

செவ்வாய்க்கிழமை நவம்பர் 16, 2021 | ஒளி: 07 கதிர்: 154 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

## பாடசாலைகள் யாவும் முழுமையாக இயங்கும்



அரசாங்க பாடசாலைகள் யாவும், அடுத்த வாரம் முதல் முழுமையாகத் திறக்கப்படும். சகல வகுப்புகளும் ஆரம்பிக்கப்படும் என கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன, நேற்று (15) தெரிவித்தார். 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பாடசாலைகள் யாவும் அடுத்தவாரம் முதல் முழுமையாக இயங்கும் என்றார்.

## உயர்தர அனுமதிக்கு வந்தபோது பாடசாலை வாசலில் மாணவி பலி

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, ஊற்றுப்புலம் கிராமத்தில் இருந்து உயர்தரம் கற்பதற்கான அனுமதியைப் பெறுவதற்காக கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு வருகை தந்த மாணவியொருவர், பாடசாலைக்கு முன்னால் உள்ள பாதசாரிகள் கடவையில் இடம்பெற்ற விபத்தில் பலியாகியுள்ளார்.

நேற்று (15) காலை 8.15 மணியளவில், பாடசாலைக்கு முன்பாக ஏ9 வீதியின் மேற்கு பகுதியிலிருந்து பாடசாலை பக்கம் பாதசாரிகள் கடவையில் வீதியை கடக்க முற்பட்ட போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில், திருவாசகம் மதுசாளினி (வயது 17) என்ற மாணவி உயிரிழந்ததுடன், மற்றொரு மாணவி காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## கொரோனா மாத்திரைக்கு சுகாதார அமைச்சு அனுமதி



கொரானா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக அமெரிக்க மருந்து நிறுவனமான 'மெர்க்'கினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'மோல்னுபிரேவிர்' மாத்திரையைப் பயன்படுத்துவதற்கு, சுகாதார அமைச்சின் மருந்துகளுக்கான

தொடர்ச்சி P2

## ஜீவனை பிரதேச சபை உறுப்பினராக்கியது அரசாங்கம்



■ பா.நிரோஸ்

தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமனை இந்த அரசாங்கம் பிரதேச சபை உறுப்பினராக்கி உள்ளதாகக் கேலி செய்த பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், இன்னும் இந்த அரசாங்கத்துக்குள் எப்படி இருக்கிறீர்கள் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தொடர்ச்சி P2

## வீரகுமார, பியசிறி, ரொஜருக்கு பிடியாணை

முன்னாள் அமைச்சர்களான வீரகுமார திஸாநாயக்க, பியசிறி விஜேநாயக்க மற்றும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ரொஜர் செனவிரத்ன ஆகியோரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், நேற்று (15) பிடியாணை பிறப்பித்தது.

தொடர்ச்சி P2

## நாகசேனையில் கைவரிசை காண்பித்த பெண் சிக்கினார்

■ எஸ்.கணேசன், பாலேந்திரன்

தலவாக்கலை, லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாகசேனை நகரிலுள்ள தபால் நிலையம் மற்றும் திருஇருதயநாதரின் திருவுருவச் சிலை என்பன உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில்,

தொடர்ச்சி P2

சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு ஆலை

# 50 நாள்களுக்கு மூடப்பட்டது

## எரிபொருள் பீதி வேண்டாம் என்கிறார் கம்மன்பில



சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை 50 நாள்களுக்கு தற்காலிகமாக மூடுவதற்கு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர் என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார். இன்று (நேற்று) திங்கட்கிழமை (15) முதல் மூடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டுக்கு அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு கையிருப்புகளை நிர்வகிப்பது மிக முக்கியமானது என்பதாலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 51 வருடங்கள் பழைமையானது என்றும் தற்போது பெய்து வரும் கனமழை காரணமாக 50 சதவீதக்கும் அதிகமான மின்சாரம் ஹைட்ரோ ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படுவதாகவும், மின்சார உற்பத்திக்கு எரிபொருளை பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என மின்சக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை நீண்ட தூர விமானங்களுக்கு ஜெட் எரிபொருளை வழங்கும் என்றும், குறுகிய தூர விமானங்கள் ஜெட் எரிபொருளை பூர்வீக விமான நிலையத்திலிருந்து பெற முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எனவே, பெற்றோல், டீசல் மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய வெளிநாட்டு கையிருப்பு பயன்படுத்தப்படும் என்று ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த அவர், சுத்திகரிப்பு நிலையம் மொத்த பெற்றோல் தேவையில் 17 சதவீதத்தையும் மொத்த டீசல் தேவையில் 29 சதவீதத்தையும் பூர்த்தி செய்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலைய மூடல்

## நாட்டில் எரிபொருள் இல்லை என்பது நிரூபணம்



சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை சில நாள்களுக்கு மூடுவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளின் பின்னணியில் நாட்டில் குறைந்தது ஒரு மாதத்துக்கு போதிய எரிபொருள் இருப்பு இல்லை என்பது நிரூபணமாகியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மக்கள் சேவைக்கு வரும்

## எம்.பிக்களுக்கு ஓய்வூதியம் எதற்கு?

### சாணக்கியன் எம்.பி சபையில் கேள்வி



மக்கள் சேவைக்காக வரும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதற்கு ஓய்வூதியம் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2

'மக்கள் சக்தி கொழும்புக்கு'

## 5 நீதிமன்றங்கள் தடையுத்தரவு; 5 நீதிமன்றங்கள் நிராகரிப்பு

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகவும் மக்கள் மீது சுமத்தப்பட்ட சுமையைக் கண்டித்தும், அத்தியாவசியப் பொருட்கள் மீதான விலை அதிகரிப்புக்கு கண்டனம் தெரிவித்தும் ஐக்கிய மக்கள் சக்தியால் இன்றையதினம் (16) வெகுஜனப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

பணிப்பாளர் நியமனத்தில்

## ஜனாதிபதியுடன் எனக்கு முரண்பாடு ஏற்படவில்லை

தேசிய ஔடத ஒழுங்குறுத்துகை அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் நியமனத்தின் போது ஜனாதிபதிக்கும் எனக்கும் இடையில் முரண்பாடு ஏற்படவில்லை என்று, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று (15) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

அளவ்வ வெடிப்பு:

## பெண்கள் படுகாயம்

### ஐந்து கிலோ மீற்றருக்கு சத்தம் கேட்டுள்ளது



அளவ்வ மஹராச்சிமுல்ல பன்கொல்ல, வீடொன்றில் நேற்று (15) இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் பெண்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அவ்வாறு காயமடைந்த பெண்கள் இருவரும் அளவ்வ மாவட்ட, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தார்.

கல் குவாரி வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான வீட்டில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வெடிப்புச் சம்பவத்தில் வீடு கடுமையாகச் சேதமடைந்துள்ளது. காயமடைந்த அந்தப் பெண்களில் ஒருவர், வர்த்தகரின் மனைவியென விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## "அதிகார இனவெறியை தமிழர்கள்மீது காட்டாதே"

### சிங்கள குடியேற்றத்தை கண்டித்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

■ க. அகரன், எஸ். நிதர்ஷன்

வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பலை மாற்ற எடுக்கும் முயற்சிக்கெதிராக, வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு முன்பாக, நேற்று (15) காலை, மாபெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திட்டமிட்ட குடியேற்றத்துக்கு எதிரான மக்கள் போராட்ட குழு மற்றும் தமிழ்அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில், குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2




## "மக்களின் உயிர்களுடன் நாம் விளையாடவில்லை"

### அமைச்சர் ரோஹித தெரிவிப்பு: காலிமுகத்திடலை நிரப்பினோம் என்றார்



நாம் எதிர்க்கட்சியிலிருக்கும் போது காலி முகத்திடலை மக்களால் நிறைத்து, அரசியல் செய்தவர்கள் எனத் தெரிவித்த துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, நாம் செய்தது அரசியல்; நாம் மக்களின் உயிர்களுடன் விளையாடவில்லை. ஆனால், இன்றைய மிகுந்த ஆபத்தான நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி, மக்களின் உயிர்களுடன் விளையாடுகிறது என்றார்.

தொடர்ச்சி P2

## அருட்தந்தை சிறில் காமினி ஏழு மணிநேரம் வாக்குமூலம்

குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னிலையாகியிருந்த அருட்தந்தை சிறில் காமினி, ஏழு மணிநேரத்துக்கு பின்னர் நேற்று (15) மாலை 6 மணியளவில் திணைக்களத்திலிருந்து வெளியேறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் அருட்தந்தை சிறில் காமினி உள்ளிட்ட தரப்பினர் வெளியிட்டுள்ள கருத்துகள் தொடர்பில், அரச புலனாய்வுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் முறைப்பாடு பதிவு செய்திருந்தார். அதற்கமையவே விசாரணைகளை முன்னெடுப்பதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களம், அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோவுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

தொடர்ச்சி P2



பட்டிப்பளை பிரதேச செயலகத்தில்

## அம்பிட்டிய தேரர் அத்துமீறி முற்றுகை

### விஹாரை அமைக்க காணி கோரி அமர்ந்து அட்டகாசம்

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளரின் அறையை, மட்டக்களப்பு, மங்களராம விஹாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர், நேற்று (15) காலை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## உயர்தர அனுமதிக்கு வந்த போது பாடசாலை வாசலில் மாணவி பலி

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பாடசாலையில் க.பொ.த சாதாரண தரம் கல்வி கற்ற மாணவிகள் மூவர், கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு உயர்தர அனுமதி பெறுவதற்காக வருகை தந்த போது இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

மாணவிகள் கடந்து செல்வதற்காக ஏ9 வீதியில் பயணித்த பட்டா ரக வாகனம் பாதசாரிகள் கடவைக்கு முன்னால் நிறுத்தியுள்ளது.

இதன் பின்னால் வந்த மின்சார சபை ஒப்பந்தகாரருடைய ஹன்ரர் ரக வாகனமும் நிறுத்தியிருந்த போது, பின்னால் வந்த இலங்கை போக்கு வரத்து சபையின் பஸ், ஹன்ரர் வாகனத்தை மோதியதால், அந்த வாகனம் பட்டாவுடன் மோதி குறித்த வாகனங்கள் இரண்டும் மாணவிகளுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தின் போது சம்பவ இடத்திலேயே குறித்த மாணவி பலியாகியுள்ளார் என்று தெரிவித்த கிளிநொச்சி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த மாணவியின் தந்தை விறகு வெட்டி, ஊற்றுப்புலத்திலிருந்து கிளிநொச்சிக்கு சைக்கிளில் நாளாந்தம் கொண்டுவந்து விற்பனைச் செய்யும் தொழிலாளி என்று தெரிவிக்கப்படுகிறது. மிகவும் வறுமைக்குட்பட்ட நிலையில் தனது மகளை கற்பித்து உயர்தரத்திற்கு அனுப்பிய நிலையில் முதல் நாளே இப் பெரும் சோகம் நிகழ்ந்துள்ளது.

இதேவேளை, விபத்தைக் கண்டித்து, சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கம், பெற்றோர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டு கவனயீர்ப்பு போராட்டமொன்றையும் முன்னெடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா மாத்திரைக்கு...

தொழில்நுட்பக் குழுவின் அனுமதி கிடைத்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன, நேற்று (15) தெரிவித்தார்.

நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், மருந்து தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதற்காக தேசிய ஔடத ஒழுங்குமுறை அதிகார சபையின் அனுமதி பெறப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஔடத ஒழுங்குமுறை அதிகார சபையின் அனுமதியைப் பெற்றதன் பின்னர், மருந்துக் கொள்வனவின் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள், கொவிட் 19 நோயாளிகளை குணப்படுத்த பல மருந்துகளை இதுவரை உருவாக்கியுள்ளன.

இருப்பினும், அந்த மருந்துகள், கொரோனா தொற்றுக்குள்ளான தீவிர நோய்கள் உள்ள நோயாளிகளுக்கு மருத்துவ மேற்பார்வையின் கீழ் வைத்தியசாலையில் வைத்து மட்டுமே வழங்கப்படுகின்றன. எனினும், 'மோல்னுபிரேவிர்' மாத்திரை அவ்வளவு ஆபத்தானது அல்ல என்றும் மருத்துவரின் பரிந்துரைப்படி வீட்டிலேயே பயன்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜீவனை பிரதேச...

2022ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், வரவு -செலவு திட்டத்தில் பெருந்தோட்ட மக்கள் வழமைபோல இம்முறையும் ஓரங்கட்டப்பட்டுள்ளனர். தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கு பெட்டிக்கடைக்கு நிதி ஒதுக்குவதுபோல நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். 500 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்து 3 வருடங்களில் லயன் அறைகளை ஒழிக்கப்போவதாக நிதி அமைச்சர் கூறுகிறார். இதுவொரு முட்டாள் தனமான கருத்து இந்த நிதியைக் கொண்டு 3 வருடங்களில் 300 வீடுகளை மாத்திரமே கட்ட முடியும் எனவும் தெரிவித்தார்.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கு பெட்டிக்கடைக்கு நிதி ஒதுக்குவது போல நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அரசாங்கம் வெளியிடும் வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்று நிருபங்கள் என அனைத்தும் நம்பிக்கை இழந்துள்ளன. அதுபோலவே அரசாங்கத்தின் வரவு -செலவு திட்டமும் நம்பிக்கையை இழக்கச் செய்துவிட்டது என்றார்.

## பெண்கள் படுகாயம்

அந்த வெடிப்புச் சத்தம், சுமார் 5 கிலோமீற்றர் சுற்றளவுக்கு கேட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது. எனத் தெரிவித்த பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 50 நாள்களுக்கு மூடப்பட்டது

நாட்டுக்கான எரிபொருள் இறக்குமதிக்கான நிதி வசதிகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் இலங்கை பல நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக தெரிவித்த அமைச்சர், இலங்கைக்கு மாதாந்தம் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு 350 மில்லியன் டொலர்கள் தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

சர்வதேச தரவரிசையில் இலங்கை குறைந்த நிலையில் உள்ள நிலையில், கடன்களைப் பாதுகாப்பது கடினமான பணியாகும் என்றும் சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தை மூடுவவதால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்று மக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

## நாட்டில் எரிபொருள்...



எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

மசகு எண்ணெயை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லை என்றால் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயை எவ்வாறு கொள்வனவு செய்வது என கேள்வி எழுப்பினார்.

நாட்டில் பரிவர்த்தனை நெருக்கடி ஏற்பட்டுள்ள வேளையில் தரகுப் பணம் அல்லது நன்மைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் எரிபொருளை கொள்வனவு செய்தமை தொடர்பில் எதிர்க்கட்சிகள் வருந்துவதாகவும் அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

## வீரகுமார, பியசிறி, ரொஜருக்கு பிடியாணை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் ஷெய்ட் ராட் அல் ஹுஸைனின் இலங்கை விஜயத்தை எதிர்த்து, 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி, கொழும்பு - 07, பௌத்தாலோக மாவத்தையிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்துக்கு முன்னால், விமல் எம்.பி உட்பட குழுவினரால், போராட்டம் நடத்தப்பட்டது.

அனுமதியின்றி ஒலிபெருக்கியைப் பயன்படுத்தியதுடன், வாகன நெரிசலை உண்டாக்கி மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தினர் என்று, கறுவாத் தோட்டம் பொலிஸாரால் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, ஜயந்த சமரவீர, வீரகுமார திஸாநாயக்க, பியசிறி விதானகே, ரொஜேர் செனவிரத்ன, மொஹமட் முஸம்மில், சமிந்த ஜயலால் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு பிரதான நீதவான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் வீரகுமார திஸாநாயக்க, பியசிறி விஜேநாயக்க மற்றும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ரொஜர் செனவிரத்ன ஆகியோர் மன்றில் ஆஜராகியிருக்கவில்லை.

அதனையடுத்தே, அவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் பிடியாணை பிறப்பித்து கட்டளையிட்டார்.

இந்த வழக்கி பிரதிவாதிகளான அமைச்சர் விமல் வீரவன்ச கடமை நிமித்தம் சென்றுள்ளதாகவும் அமைச்சர் ஜயந்த சமரவீர சுகயீனமுற்றிருந்ததாகவும், அவர்களது சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் மாத்திரமே நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

இதனையடுத்து வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 07ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ப்படும் என அறிவிக்கப்பட்டது.

## ஜனாதிபதியுடன் எனக்கு...

அமைச்சர் என்ற ரீதியில் சரியானதைச் செய்ய முடியாவிடின், வேறு வழியை பார்த்துக்கொள்வதாகத் தெரிவித்தார்.

அதிகாரசபை சட்டத்தின் பணிப்பாளர் நாயகத்தை நியமிப்பதற்கான முழு அதிகாரமும், விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் தனக்கு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சுகாதார அமைச்சில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தேசிய ஔடத அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் நியமனம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் ரம்புக்வெல்ல,

பதவி வெற்றிடம் இருந்த போது அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு தெரிவு தற்காலிகமாக வந்தது. அதனை அலசி ஆராய்ந்து, அது தொடர்பான உண்மைகளை அப்போது முன்வைக்கப்பட்டபோது, தகுதியுடையவர் என்று கூறப்படும் அதிகாரியின் ஒருவித தகுதிக் குறைபாட்டைக் காட்டி, இந்த விவகாரம் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. ஜனாதிபதியுடனும் கலந்துரையாடி, நாங்கள் சம்மதித்து அந்த அனைத்து தகுதியும் உள்ள ஒருவரை நியமிக்க முடிவு செய்தோம் என்றார்.

## எம்.பிக்களுக்குக்கு...

பாராளுமன்றத்தில் நேற்று (15) இடம்பெற்ற வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் பங்கேற்கு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "ஆளும் தரப்பினரும் எதிர் தரப்பினரும் கொள்ளையடித்தவர்கள் தொடர்பாக பேசுகிறார்கள். நாமும் இந்தக் கொள்ளையர்கள் எப்போது பிடிப்பட்டு சிறைக்குச் செல்வார்கள் என்பதை காண ஆவலாக இருக்கிறோம்.

மத்திய வங்கியில் கொள்ளையடித்தவர்கள் இருந்தால், அவர்களை சிறையில் அடையுங்கள். நாமும் அதனைக் காண மகிழ்ச்சியாக காத்துக் கொண்டிருக்கிறோம்.

நிதியமைச்சரின் 2022 வரவு - செலவுத் திட்ட உரையானது, திருமண வீட்டில் கதைக்க வேண்டிய கதையை மரண வீட்டில் கதைத்ததைப் போன்றுதான் காணப்பட்டது.

இந்த வரவு - செலவுத் திட்டமானது, இலங்கையின் பொருளாதாரம் குறித்து அக்கறையில்லாமல் தயாரித்தது போன்றுதான் காணப்படுகிறது.

உதாரணமாக ஒரு கிராம அபிவிருத்திக்காக 3 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது எதிர்வரும் தேர்தலை குறிவைத்து கொண்டுவரப்பட்டதாகவே தெரிகிறது.

செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டிய இந்த நேரத்தில் இவ்வாறான வேலைத்திட்டங்கள் அவசியமா என்பதைத்தான் நாம் சிந்திக்க வேண்டும்.

அத்தோடு, வேலை செய்ய முடியாத இராஜாங்க அமைச்சர்களை அரசாங்கம் பதவிலிருந்து விலக்க வேண்டும்.

அவருக்கு வாகனம் கொடுத்து, டீசல் கொடுத்து, சாரதி, அலுவலம், சம்பளம் என எல்லாம் கொடுத்து அவரால் வேலை செய்ய முடியாவிட்டால் அவர் அந்தப் பதவியில் இருப்பதில் பயனில்லை.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாலேயே நன்றாக வேலையை செய்ய முடியும். எனவே, அரசாங்கம் இதுதொடர்பாகவும் சிந்தித்து, ஒரு கொள்கை முடிவொன்றை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், என்னைப் பொறுத்தவரை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் எனும் ஒன்றே தேவையில்லை. மக்கள் சேவைக்காக வரும் உறுப்பினர்களுக்கு எதற்கு ஓய்வூதியம்?

ஓய்வூதியம் தொடர்பான சர்ச்சை தற்போது எழுந்துள்ள நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை இரவு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக் கொண்டு குறித்த விடயம் தொடர்பாக அதிருப்தியடைந்துள்ளனர் என நான் அறியக்கிடைத்தேன்.

மக்களை ஏமாற்றும் வகையில் கருத்துக்களைக் கூறாமல், பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டுமெனில் சில தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்தே ஆக வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## நாகசேனையில் கைவரிசை...

பெண்ணொருவர் லிந்துலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாகசேனை நகரத்தில் இயங்கும் தபால் நிலையம் நேற்றுமுன்தினம் (14) இரவு உடைக்கப்பட்டு பொருட்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. இதேவேளை தபாலகத்திற்கு முன்பாக உள்ள இருதய ஆண்டவர் கிறிஸ்தவ தேவாலயத்தின் முன்பகுதியில் காணப்பட்ட திருவுருவச்சிலையும் உடைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பிரதேச மக்கள் லிந்துலை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபின், குறித்த தபால் நிலையத்தில் உள்ள சமயலறைக்கு சென்ற பொழுது, அங்கிருந்த 38 வயது மதிக்கதக்க பெண் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண்ணிடம் லிந்துலை பொலிஸார், மேலதிக விசாரரணைகைளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## "அதிகார இனவெறியை தமிழர்கள்மீது...

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், "எங்கள் நிலம் எமக்கு வேண்டும்", "தொல்பொருள் திணைக்களமே வரலாற்றை திரிபுபடுத்தாதே", "அதிகார இனவெறியை தமிழர்கள்மீது காட்டாதே", "சிங்கள குடியேற்றத்தை நிறுத்து" போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

இதேவேளை, ஜனாதிபதிக்கு அனுப்பும் நிமித்தம் வவுனியா வடக்கு பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், சி.சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்தராஜா,

பிரதேச சபை தலைவர்களான ச.தணிகாசலம், எஸ். யோகராசா, நகரசபை தவிசாளர் இ.கௌதமன் உட்பட அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## அருட்தந்தை சிறில் காமினி...

முன்னதாக, குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராக அவகாசம் கோரியிருந்த நிலையில், அவர் தற்போது அங்கு ஆஜராகியுள்ளார்.

## மக்களின் உயிர்களுடன்...

ஸ்ரீ லங்கா பொதஜன பெரமுன கட்சி அலுவலகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

இரண்டு மாதங்களுக்கு முன்னர் நாம் அனைவரும் மரண பயத்தில் இருந்தோம். ஏதோ ஒருவகையில் கொரோனாவின் தாக்கம் குறைவடைந்த போது, ஆசிரியர்கள், விவசாயிகள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமையால், அதன்மூலம் சற்று அதிகரிப்பு காணப்படுகின்றது.

இன்று (16) ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் முன்னெடுக்கவுள்ள செயற்பாடானது, நாட்டில் மீண்டும் கொரோனா தொற்றை அதிகரிக்கும் செயற்பாடாகும். நாட்டில் கொரோனா நிலைமையையும் தொற்றாளர்களின் எண்ணிக்கையையும் அதிகரித்து, மரணங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது, அரசாங்கத்தால் நாட்டை முடக்க வேண்டிய நிலை ஏற்படும்" என்றார்.

நாடு முடக்கப்பட்டதுடன், நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மூடப்படும் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் .மக்கள் உணவில்லை என தெரிவித்து வீதிக்கு இறங்குவர். இதைதான் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியினரின் அரசியல் தேவையாகும்.

மிலேச்சதனமான எந்தவோர் அரசியல்வாதியும் செய்யாத தேவையில்லாத அரசியல் தேவையாகும்.

இதற்கு பிறகு நாட்டில் கொரோனா அதிகரிக்குமாயின் அதற்கான பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தியே ஏற்கவேண்டும்.

எம்மால் உரிய நேரத்தில் தேர்தல் வைக்கப்படும் போது, தேர்தல் மேடைகளில் வெற்றி தோல்வியை தெரிவு செய்வோம். மக்களின் சடலங்கள் மீது அரசியல் செய்ய வேண்டாம். எனவே, இதற்கு பிறகு தொற்று அதிகரிக்குமாயின் புதிய அலை ஒன்று ஏற்படுமாயின் அதற்கு ஐக்கிய மக்கள் சக்தி அலை என்றே பெயர் வைக்கப்படும் என்றார்.

## அம்பிட்டிய தேரர்...

இதன்காரணமாக, பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் நடவடிக்கைகள் நேற்றையதினம் முற்றாக முடங்கின.

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கெவிழியாமடு பகுதியில் வன இலாகாவுக்குரிய காணியை, விஹாரை அமைப்பதற்கு கோரியதாகவும் அதனை வழங்குவதற்கு தனக்கு அதிகாரம் இல்லையென பிரதேச செயலாளர் தெரிவித்ததை தொடர்ந்தே, இந்தப் போராட்டத்தை தேரர் முன்னெடுத்துள்ளார்.

பிரதேச செயலாளரையும் ஊழியர்களையும் அச்சுறுத்தும் வகையிலும் அரச ஊழியர்களின் நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் அம்பிட்டிய சுமனரத்ன தேரர் செயற்பட்டதாக குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன.

## 5 நீதிமன்றங்கள் தடையுத்தரவு; 5 நீதிமன்றங்கள்...

'மக்கள் சக்தி கொழும்புக்கு' எனும் தொனிப்பொருளில் கொழும்பில், இந்தப் போராட்டம் இன்று (16) முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்துக்கு தடையுத்தரவு பிறப்பிக்கக்கோரி, பொலிஸார் நீதிமன்றங்களை நாடியிருந்தனர். பொலிஸாரின் கோரிக்கையை ஆராய்ந்த நீதிமன்றங்களில், 5 நீதிமன்றங்கள் தடையுத்தரவு பிறப்பித்துள்ளன. இதேவேளை, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உள்ளிட்ட 5 நீதிமன்றங்கள் தடையுத்தரவுக் கோரிக்கையை நிராகரித்துள்ளன.

இதேவேளை, 18 பொலிஸ் நிலையங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், நேற்று (15) நிராகரித்தது.

புளூமெண்டல், கிருலப்பனை, நாரஹேன்பிட்டி, பம்பலப்பிட்டி, வெல்லம்பிட்டி, வெலிக்கடை, கொத்தட்டுவ, முல்லேரியா, மாளிகாவத்தை, பொரளை, மோதர, கறுவாத்தோட்டம், தெமட்டகொட, கிராண்ட்பாஸ், மட்டக்குளி, வாழைத்தோட்டம் மற்றும் கரையோர வீதி பொலிஸ் நிலையங்கள் முன்வைத்த கோரிக்கைகளே நிராகரிக்கப்பட்டன.

அரசியலமைப்பின் 14ஆவது பிரிவின்படி, பொது மக்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்க உரிமை உள்ளது என்றும் கொரோனா நோய் தொடர்பாக சுகாதார பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை, யாராவது மீறினால், அந்த நோக்கத்துக்காக பொலிஸ் அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று கொழும்பு பிரதான நீதவான் புத்திக ஸ்ரீராகல சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தின் 8 நீதிமன்றங்களில் 20 பொலிஸ் நிலையங்களினால் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் 18 பொலிஸ் நிலையங்கள் முன்வைத்த கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

புதுக்கடை இலக்கம் 5 நீதவான் நீதிமன்றம், மஹர இலக்கம் 1 மற்றும் 2 நீதவான் நீதிமன்றங்கள், கடுவெல நீதவான் நீதிமன்றம், ஹோமாகம நீதவான் நீதிமன்றம் ஆகியனவையே போராட்டத்துக்கு தடையுத்தரவு பிறப்பித்துள்ளன.

அதேவேளை, மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம், கங்கொடவில நீதவான் நீதிமன்றம், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், கல்கிஸை நீதவான் நீதிமன்றம், அத்தனகல நீதவான் நீதிமன்றம் ஆகியவை, போராட்டங்களைத் தடுக்க நீதிமன்ற உத்தரவைக் கோரி பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிராகரித்துள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெறாமல் ஐக்கிய மக்கள் சக்தியினால் நாளை (இன்று) எதிர்ப்பு பேரணிகளை ஏற்பாடு செய்துள்ளதாக பொலிஸார் மேற்படி நீதிமன்றங்களில் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திட்டமிட்டபடி போராட்டம் நடத்தப்படும்

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் திட்டமிட்டபடி நடத்தப்படும். எத்தகைய அழுத்தங்கள் பிரயோகித்தாலும் தொடர்வோமென பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.



அரசாங்கத்துக்கு எதிரான பாரிய ஆர்ப்பாட்டம் கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதலை முன்வைத்து தடை உத்தரவுக்கான கோரிக்கை முன் வைக்கப்படவுள்ளது.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் எத்தகைய அழுத்தங்களுக்கு மத்தியிலும் திட்டமிட்டபடி நடத்தப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

## செவ்வாய் கிரகத்திலா நிவாரணம் பெறுவது?

### முன்னாள் எம்.பி கேள்வி

■ கே.எல்.ரி.யுதாஜித்



வருமானம் இன்றி நாட்டை முன்னேக்கிக் கொண்டுசெல்ல முடியாத நிலையில் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் கணிசமான அளவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், அந்த நிவாரணத்தை செவ்வாய் கிரகத்தில் இருந்தா பெறுவது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சி ஊடகச் செயலாளரும், அக்கட்சியின் பட்டிருப்புத் தொகுதி தலைவருமான பா. அரியநேத்திரன் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சமர்பித்த 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் தொடர்பாக நேற்று (15) கருத்து வெளியிடுகையிலேயே, அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில், "வரவு இல்லாத செலவுகளே அதிகமாக இந்த பட்ஜெட்டில் உள்ளதை அவதானிக்க முடிகிறது. நாட்டின் பொருளாதாரம் படுபாதாளத்தில் சென்று கொண்டிருக்கும் நிலையில், வறுமைக்கோட்டில் வாழும் பட்டினியால் பாதிக்கப்படும் நிலையை இந்த வரவு -செலவுத் திட்டத்தை அவதானிக்கும்போது நன்கு விளங்குகிறது. "இலங்கை சுதந்திரம் அடைந்த 1948ஆம் ஆண்டில் இருந்து கடந்த 2019ஆம் ஆண்டு வரை 75 வரவு - செலவுத்திட்ட உரைகள் பல நிதி அமைச்சர்களால் இலங்கை பாராளுமன்றில் சமர்பிக்கப்பட்டிருக்கின்றன.

"ஆனால், இந்த 76வது வரவு - செலவுத்திட்ட உரை மட்டுமே சரித்திரத்தில் நிதி அமைச்சர் நான்கு விதமாக, தமது உரையை அவஸ்தைப்பட்டு வாசித்துள்ளமையை காணமுடிந்தது.

"முதலாவதாக நின்றும், இரண்டாவதாக இருந்தும், மூன்றாவதாக ஓய்வெடுத்தும், நான்காவதாக மாத்திரைகளை விழுங்கியும் வாசிக்கப்பட்ட ஒரு சாதனை வரவு -செலவுத் திட்ட உரையாக இது இருந்ததை அவதானிக்க முடிந்தது.

"நிதி அமைச்சர் உரை சாதனையாக இருந்தாலும் உள்ளடக்கம் அவ்வாறானதாக இருந்ததா என்றால் இல்லை என்பதே பலரின் அபிப்பிராயங்களாக உள்ளன.

## கொவிஷீல்ட் தடுப்பூசி யாருக்கும் ஏற்றப்படவில்லை



இலங்கையில் 14ஆம்திகதி அன்று மாத்திரம் கொவிஷீல்ட் முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசிகள் யாருக்கும் ஏற்றப்படவில்லையென தடுப்பூசி தொடர்பான தகவல்களில் தெரிவிக்கப்படுகின்றன.

இதேவேளை, கொவிஷீல்ட், சைனோபார்ம், ஸ்புட்னிக் V, பைசர், மொடர்னா தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சைனோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 468 பேருக்கும் சைனோபார்ம் இரண்டாவது டோஸ் 15,644 பேருக்கும் பைசர் முதலாவது டோஸ் 681 பேருக்கும் பின்னர், பைசர் இரண்டாவது டோஸ் 313 பேருக்கும் பைசர் மூன்றாவது டோஸ் 1,343 பேருக்கும் ஏற்றப்பட்டன.

இதேவேளை, ஸ்புட்னிக் V முதலாவது டோஸும் இரண்டாவது டோஸும் யாருக்கும் ஏற்றப்படவில்லை. மேலும், மொடர்னா முதலாவது டோஸும் யாருக்கும் ஏற்றப்படாத இவ்வேளை,மொடர்னா இரண்டாவது டோஸ் ஐவருக்கு ஏற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தாழமுக்கமாக வலுவடையக் கூடிய சாத்தியம்

## மீனவர்களுக்கு அவதான எச்சரிக்கை

நாளை 17ஆம் திகதி மேற்கு மத்திய வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக, தாழமுக்கமாக வலுவடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வாநிலை அவதான நிலையம் தெரிவிக்கறது. எனவே,கடலுக்குச் செல்லும் மீனவர்கள் அவதானமாக செயற்படுமாறு வேண்டப்படுகின்றனர்.

இதன்பிறகு, தொடர்ந்தும் மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்தநாள் 18ஆம் திகதியளவில் ஆந்திரப் பிரதேசத்துக்கு அண்மையாக கரையைக் கடக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இலங்கையின் கிழக்காக உள்ள ஆழம் கூடிய கடற்பரப்புகளில் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாகவும் எதிர்கால முன்னறிவிப்புகள் தொடர்பாகவும் அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.



## எல்லையற்ற அதிகாரத்தால் மூளை பழுதடைந்துவிடும்

தனிநபர் ஒருவருக்கு எல்லையற்ற அதிகாரத்தை வழங்கும் போது, அந்த நபர் பைத்தியமாகிவிடுவார். அவரது மூளை பழுதடைந்து விடும் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம, அதன் பின்னர் தனக்கு வேண்டியவர்களை மாத்திரம் அருகில் வைத்துக்கொண்டு நாட்டை ஆட்சி செய்வார். தானே எல்லோரையும் விட மேலானவர் என நினைப்பார். அப்படி செல்லும் போது நாடு சீரழியும். இன்று எமது நிலையும் அதுவே என்றார்.

எம்பிலிப்பிட்டியவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.தொடர்ந்து தெரிவித்த அவர்,

குடும்ப உறுப்பினர்களை அருகில் சேர்த்துக்கொண்டமையாலேயே, மஹிந்த தோல்வியைத் தழுவினார். தமது குடும்ப உறுப்பினர்களை அருகில் சேர்த்துக்கொள்ள வேண்டாமென ஒருநாள் மஹிந்தவிடம் கோரியிருந்தேன். அவ்வாறானதொரு தவறை மீண்டுமொரு தடவை செய்யமாட்டேன் என மஹிந்த கூறினார்.

மஹிந்த என்னுடைய நல்ல நண்பர் எனத் தெரிவித்த அவர், தான் மிகவும் மதிக்கும் ஒருவர், இன்றும் நேசிக்கும் ஒருவர் என்றார். ஆனால் தனது குடும்பத்தினரை அருகில் சேர்த்துக்கொள்ளமாட்டேன் எனத் தெரிவித்தவர் மீண்டும் அந்த தவறை செய்துள்ளார் என்றார்.

மஹிந்த நல்லவர் என்றாலும் அவருக்கு இப்போது வயதாகிவிட்டது. எனவே வயது செல்ல, செல்ல பாரிய எதிர்பார்ப்புகளை மஹிந்த ராஜபக்ஷ விடம் வைக்க முடியாது என்றார்.

## சட்டமானி நுழைவுப் பரீட்சை

## வினாத்தாள்கள் கசிந்தது எப்படி?

### சபையில் சாணக்கியன் கேள்வி

■ பா.நிரோஸ்



திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டமானி நுழைவுப் பரீட்சைக்கான வினாத்தாள்கள், சட்டக் கல்லூரிக்கான வகுப்புக்களை நடத்தும் Pramuka Law School என்கிற நிறுவனத்துக்கு முன்கூட்டியே எவ்வாறு கிடைத்துள்ளன என்பது தொடர்பில் அரசாங்கம் ஆராய வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்தார். வரவு செலவு திட்டம் மீதான நேற்றைய (15) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய சாணக்கியன், திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டமானி நுழைவுப் பரீட்சைக்கான வினாத்தாள்கள், சட்டக் கல்லூரிக்கான வகுப்புக்களை நடத்தும் Pramuka Law School என்கிற நிறுவனத்துக்கு முன்கூட்டியே கிடைத்துள்ளன. எவ்வாறு கிடைத்துள்ளன என்பது தொடர்பில் ஆராய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

■ பா.நிரோஸ்

நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுபாடு ஏற்படாது. கொரோனாவைப் பயன்படுத்தி ஆட்சியை கவிழ்க்கவே எதிர்க்கட்சியினர் நினைத்ததாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே,தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் காமினி லொக்குகே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் பாரிய முயற்சிகளால் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கு முடிந்துள்ளது. கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை செலுத்திகொள்ளப் போவதில்லை என எதிர்க்கட்சி தலைவர் கூறியிருந்தார். எனினும் அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதன் பின்னர் அவரும் தடுப்பூசியை செலுத்திகொண்டார்.



கொரோனா வைரஸைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினர் ஆட்சியை கவிழ்க்க நினைத்தார்கள். எனினும், அது நடக்கவில்லை. உரப் பிரச்சினையை வைத்து ஆட்சியை கவிழ்க்க நினைக்கிறார்கள். அதனையும் பார்ப்போம். மக்களிடத்தில் சென்று வாக்கு கேட்பதற்கான பலம் எதிர்க்கட்சிக்கு இல்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதெனவும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகிறதெனவும் கூறுகிறார்கள். யார் என்ன சொன்னாலும் நாட்டுக்குத் தேவையான எரிபொருளை வழங்க அரசாங்கம் தயாரக இருக்கிறது. அதுபோல மின்சார தடையும் நாட்டில் ஏற்படாது. நாட்டில் எரிபொருளுக்கு, மாவுக்கு, வரிசை ஏற்படும் என எதிர்க்கட்சியினர் நினைக்கிறார்கள் அவ்வாறு நடக்காதெனவும் தெரிவித்தார்.

## எல்லோரும் எதிர்க்கிறார்கள் என்று

## அரசாங்கத்தை எதிர்த்தால் முஸ்லிம்களுக்குப் பாதிப்பு

■ பா.நிரோஸ்



எல்லோரும் எதிர்க்கிறார்கள் என அரசாங்கத்தை எதிர்த்தால் முஸ்லிம் சமூகத்துக்குப் அது பெரும்பாதிப்பை ஏற்படுத்தும். நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவு திட்டமானது, இனவாதம் இல்லாத வரவு செலவு திட்டம் என புகழாரம் சூட்டினார் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நேற்றைய (15) விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், வரவு செலவு திட்டத்தில் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு மாகாணங்கள் என அனைத்தையும் ஒன்றிணைத்து இனவாதம் இல்லாத வரவு செலவு திட்டத்தை அரசாங்கம் சமர்ப்பித்துள்ளது.

சிறுபான்மை இன மக்களுக்கும் வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க செய்யும் வகையிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாஸா எரிப்பு தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாடி அதற்கும் கடந்தக் காலங்களில் தீர்வை பெற்றுக்கொண்டிருந்தோம். தற்போது மாடறுப்பு தொடர்பில் பிரச்சினை எழுந்துள்ளது. இது குறித்தும் பிரதமர், நிதி அமைச்சருடன் பேசி இருக்கிறோம். அதற்கும் விரைவில் தீர்வை பெற்றுதருவதாக கூறியிருக்கிறார்கள். நாட்டில் சிறுபான்மை இனத்தவருக்குப் பிரச்சினைகள் வரும்போது அரசாங்கத்துடன் பேசி அதனை தீர்க்க வேண்டும். மாறாக எல்லோரும் எதிர்க்கிறார்கள் நாங்களும் எதிர்க்க வேண்டும் என எதிர்ப்பை வெளிப்படுத்தினால் அது முஸ்லிம் சமூகத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் கூறினார்.

## அடுத்த வாரம்

## பெற்றோல், டீசல் இருக்குமா என்பது சந்தேகம்

■ பா.நிரோஸ்

ஆளுங்கட்சிக்கு ஒரு சட்டமும் எதிர்க்கட்சிக்கு ஒரு சட்டமும் இருக்க முடியாது. அடுத்த வாரம் நாட்டில் பெற்றோல், டீசல் இருக்குமா என்பது சந்தேகம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

பெற்றோல், டீசல் அடுத்த வாரம் இருக்குமா என்பது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. சபுஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் மசகு எண்ணெய் இல்லாததால் அந்த நிலையம் மூடப்பட்டுள்ளது. நாட்டில் அனைத்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் தினந்தோறும் வரிசையில் நிற்கிறார்கள். இதற்கான எந்தவொரு தீர்வையும் வரவு செலவு திட்டத்தில் அரசாங்கம் வழங்கவில்லை.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், தற்போதைய அரசாங்கம் கடுமையான விமர்சனங்களுக்கு முகங்கொடுத்து வருகிறது. நாட்டின் சாபமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாறியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் இன்றைய போராட்டத்தைப் பார்த்து அரசாங்கம் பயந்துள்ளது. போராட்டத்தை தடுத்து நிறுத்த பல முயற்சிகளை அரசாங்கம் செய்கிறது. குறிப்பாக சுகாதாரத்துறையினர், பொலிஸாருக்கு பெரும் அழுத்தங்களை வழங்கி போராட்டத்தை நிறுத்தப் பார்க்கிறார்கள். எமது போராட்டத்தில் கலந்துகொள்ளும் பிரதேச சபை உறுப்பினர்கள் வீடுகளுக்கு பொலிஸார் சென்று போராட்டத்துக்கு செல்ல வேண்டாம் என கூறிவருகிறார்கள்.

போராட்டத்துக்குத் தடை ஏற்படுத்துவதற்கு நீதிமன்றம் தடை ஏற்படுத்தியுள்ளது. போராட்டத்தை ஒருபோதும் நிறுத்தப்போவதில்லை. எவராலும் நிறுத்தவும் முடியாது. அரசாங்கத்துக்குள்ளேயே அரசாங்கம் மீது எதிர்ப்புகள் உள்ளன. ஒரே நாடு ஒரே சட்டம் என்று ஆட்சிக்கு வந்தார்கள். பண்டுவஸ்நுவரவில் அண்மையில் அரச நிகழ்வொன்று அண்மையில் நடைபெற்றது. அந்த போராட்டத்துக்கு சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் இல்லையா? எனவும் அவர் இதன்போது கூறினார்.

அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் ஒன்று திரளும்போது அதனை தடுக்க அரசாங்கம் முயற்சிப்பது வெட்கத்துக்குரியது. நாட்டின் ஜனநாயகத்தை இல்லாதொழிப்பதற்கே அரசாங்கம் முயற்சிக்கிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டங்களில் மாத்திரமா கொரோனா வைரஸ் பரவுகிறது. ஆளுங்கட்சியினருக்கு ஒரு சட்டமும், எதிர்க்கட்சியனருக்கு ஒரு சட்டமும் இருக்க முடியாது.

தற்போது வைத்தியர் ஷாபி எங்கே, கருத்தடை கொத்து எங்கே? எனவும் கேள்வி எழுப்பிய ஹர்ஷன எம்.பி, இனவாதம், மதவாதத்தை தூண்டிவிட்டு குண்டுகளை வெடிக்கச் செய்தே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததாகவும் கடுமையாகச் சாடினார்.



உணவகங்களில் உணவு சீர்கேடுகள்

# அதிரடி சட்ட நடவடிக்கை

■ பாறுக் ஷிஹான்

உணவு சீர்கேடுகள், உணவகங்களில் பாரதூரமான குறைபாடுகள் அவதானிக்கப்படின், துரித கதியில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜி. சுகுணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று (15) அவர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில், "உணவகங்களில் சுகாதார சீர்கேடு என்பது தொடர்ச்சியாக எமக்கு கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடு ஆகும்.



"கொரோனா அனர்த்த நிலைமையை அடுத்து, பாடசாலைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்நிலையில், உணவு சீர்கேட்டால் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள் என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

"கல்முனை பிராந்தியத்தில் உணவகங்களின் எண்ணிக்கை மிக அதிகமாகக் காணப்படுகின்றது. கடந்த வருடங்களிலும் அதிகளவான சுகாதார சீர்கேடு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. இருந்த போதிலும், கொரோனா அனர்த்த நிலைமையிலும் கூட இவ்விடயத்தில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம்.

"எமது பிராந்தியத்தில் உணவு பாதுகாப்பிற்கென தனிப்பிரிவும் தொற்றுநோய் பிரிவும் தனித்தனியே இயங்குகின்ற நடைமுறை காணப்படுகின்றது. அந்த வகையில், உணவு சுகாதார சீர்கேடுகளைத் தடுப்பது எமக்கு பாரிய பொறுப்பாக உள்ளது.

"சவால்களுடன் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இதற்காக ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் திடீர் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக உணவு பாதுகாப்பு கண்காணிப்பாளர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டு அன்றாடம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

# தொல்பொருட்களுடன் இளைஞன் கைது

■ பாறுக் ஷிஹான்

பண்டையகால தொல்பொருட்கள் என சந்தேகிக்கப்படும் பொருட்களைத் தம்வசம் வைத்திருந்த இளைஞனை, அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, வெள்ளிக்கிழமை (12) மாலை அக்கரைப்பற்று போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.பகீரதன் தலைமையில் சென்ற பொலிஸார், மேற்படி இளைஞனை கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் தாண்டியடிப் பகுதியை சேர்ந்தவர் எனவும் 19 வயதுடையவர் எனவும் அவரிடமிருந்து தங்கமுலாம் பூசப்பட்ட ஆபரணங்கள் அடங்கிய பொருட்கள் பல மீட்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கபபடுகிறது.



# போதைப்பொருளுடன் குடும்பஸ்தர் கைது

■ பாறுக் ஷிஹான், கனகராசா சரவணன்

'அபீன்' போதைப்பொருளை கடத்திய குடும்பஸ்தரை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விசேட புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையில் நேற்று முன்தினம் (14) இரவு சென்ற பொலிஸார், மேற்படி நபரை கைது செய்துள்ளனர்.

பொலன்னறுவை மாவட்டம், கதுருவெல பகுதியில் இருந்து அரச பஸ்ஸில் அபீன் போதைப்பொருள் கடத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலின்படி, காத்தான்குடி, டெலிகொம் சந்தியில் வைத்து இச்சந்தேகநபர் கைதானார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர், கதுருவெல பகுதியை சேர்ந்த 50 வயதுடையவர் எனவும் சந்தேக நபரிடம் இருந்து 100 கிராம் அடங்கிய அபீன் போதைப்பொருள் மீட்கப்பட்டது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.





## அமரர் ரகுவின் நினைவேந்தல்



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் குமாரசாமி நந்தகோபனின் (ரகு) 13ஆவது நினைவேந்தல் நிகழ்வு, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரகாந்தன் தலைமையில், கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று (15) நடைபெற்றது. மறைந்த முன்னாள் தலைவர் நந்தகோபனின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, நினைவுச் சுடர்களும் ஏற்றப்பட்டு, நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டன. இதன்போது பாடசாலை மாணவர்களுக்கான சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

(படங்கள்: வ. சக்தி)

# ஜப்பானில் தொழில் என பண மோசடி

## நபருக்கு விளக்கமறியல்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

ஜப்பான் நாட்டில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி, ஏமாற்றிப் பணம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை, இம்மாதம் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். ஹம்சா, நேற்று முன்தினம் (14) உத்தரவிட்டார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே, மேற்படி குற்றச்சாட்டில் சனிக்கிழமை (13) கைதுசெய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பணம் கொடுத்து ஏமாற்றப்பட்ட அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பிரதேசங்களைச் சேர்ந்த 06 பேர், பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பணத்தை நேரடியாகவும், வங்கிக் கணக்கினூடாகவும் செலுத்தியதாகவும் முறைப்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனுடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார் எனவும் அவரைத் தேடி வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபரை, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச். எம். ஹம்சா முன்னிலையில் ஆஜர் செய்த போதே, இம்மாதம் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

எதிர்காலத்தை கருதி

# "தடுப்பூசியை கட்டாயம் ஏற்றவும்"

■ எம்.எஸ்.எம். ஹனீபா



எதிர்காலத்தில் கொவிட்-19 தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்பட உள்ளதால், கிழக்கு மாகாணத்தில் இதுவரை தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக், நேற்று (15) கேட்டுக்கொண்டார்.

வைத்தியசாலைகள், வியாபார நிலையங்கள், பொது இடங்களுக்கு செல்வதற்கு தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்படவுள்ளது.

எனவே, இதுவரை முதலாம், இரண்டாம் டோஸ் தடுப்பூசி பெறாதவர்கள், தத்தமது சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துடன் தொடர்புகொண்டு, தங்களுக்கான தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் தடுப்பு மருந்து ஏற்றும் பணிகள் தொடர்ந்தும் கிரமமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் முன்னிலை அரச உத்தியோகத்தர்களுக்கான மூன்றாவது பூஸ்டர் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.


தவிசாளராக இருந்து நீக்கப்பட்ட முஜாஹிர்

# மீண்டும் பதவியேற்கிறார்

## பழைய வர்த்தமானி அறிவித்தலும் இரத்தானது

■ றொசேரியன் லெம்பேட்

மன்னார் பிரதேச சபையின் புதுக்குடியிருப்பு உறுப்பினராகவும் சபையின் தவிசாளராகவும் இருந்து நீக்கப்பட்ட சாகுல் கமீது முஹம்மது முஜாஹிர், மீண்டும் தனது பொறுப்புகளை ஏற்க இருக்கின்றார்.



வடமாகாண முன்னாள் ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸால், "மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் சாகுல் கமீது முஹம்மது முஜாஹிர், மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் என்ற வகையில், அப்பதவியில் பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும்போது குற்றங்களை புரிந்துள்ளார் என்பதற்கு போதுமான சாட்சியங்கள் இருக்கின்றன" எனத் தெரிவித்து, தவிசாளர் மற்றும் சபை அங்கத்துவர் பதவிகளில் இருந்து நீக்கம் செய்யப்பட்டதாக, செப்டெம்பர் 13ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது.

இந்நிலையில், வடமாகாண ஆளுநரால் மன்னார் பிரதேச சபை தவிசாளர் நீக்கப்பட்டமையை ஆட்சேபித்து எஸ்.எச்.எம். முஜாஹினால் கொழும்பு மேல் நீதிமன்றில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், மன்னார் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு, செப்டெம்பர் 29ஆம் திகதி நடைபெற்றது. அப்பொழுது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி வசம் இருந்த மன்னார் பிரதேச சபை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வசம் திரும்பியிருந்தது.



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை சார்ந்த எருக்கலம்பிட்டி உறுப்பினர் எம்.ஐ.எம். இஸதீன் ஒரு வாக்கு வித்தியாசத்தால் மன்னார் பிரதேச சபை தவிசாளராக அப்பொழுது தெரிவு செய்யப்பட்டு இருந்தார்.

இந்த நிலையில், 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 185 (3) (ஆ) ஆம் பிரிவின்படி விடயப் பொறுப்பு அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டு, 2018.10.24ஆம் திகதி முதலாவது வட மாகாண சபை காலாவதியானதன் பேரில், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் 2ஆம் பிரிவினூடாக, எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் வட மாகாண ஆளுநராகிய ஜீவன் தியாகராஜா ஆகிய நான் ஓய்வுபெற்ற நீதி அலுவலர் கந்தையா அரியநாயகம் அவர்களின் கீழ் அமைக்கப்பட்ட தனிநபர் விசாரணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில், சாகுல் ஹமீது முஹம்மது முஜாஹிர் அவர்களை, மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர் பதிவியிலிருந்து நீக்கத் தீர்மானித்து வெளியிடப்பட்ட 2021.09.13ஆம் திகதிய வர்த்தமான அறிவித்தலை இரத்து செய்கின்றேன் எனக் குறிப்பிட்டு, வடமாகாணம் ஆளுநர் ஜீவன் தியாகராஜா இம்மாதம் 10ஆம் திகதி, புதன்கிழமை, வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து சாகுல் கமீது முஹம்மது முஜாஹிர், தனது பதவியை மீண்டும், பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கொயிலாமனை மக்கள் போராட்டம்

■ எஸ். நீதர்ஷன்

இராமாவில் கிராமசேவகர் பிரிவு, தாவளை இயற்றாளை கிராமசேவகர் பிரிவை எல்லைப்படுத்தும் தெருவை, தனியார் சிலர் அடைத்து வைத்துள்ளமையை கண்டித்து, அப்பகுதி மக்கள், நேற்று (15) காலை 7 மணியில் இருந்து, கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இராமாவில் கிராமசேவகர் பிரிவு, தாவளை இயற்றாளை கிராமசேவகர் பிரிவை எல்லைப்படுத்தும் தெருவை, தனியார் சிலர் அடைத்து வைத்துள்ளமையால், குளத்துக்குள்ளால் தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால், மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டை மிகுந்த சிரமத்தின் மத்தியில் மேற்கொள்கின்றனர். இடுப்பளவுக்குள்ளான குளத்து நீருக்குள்ளால் பாடசாலைக்குச் செல்லும் துன்பியலான நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகிறது.

சுமார் 60 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தி வரும் இவ்வீதியை தனியார் சிலர், மறித்து வேலியை அடைத்துள்ளனர்.







## எரிபொருளுக்கு குவியும் மக்கள்...

நாடளாவிய ரீதியில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட உள்ளதாக செய்திகள் பரவியதை தொடர்ந்து, நேற்று (15) காலை, மன்னார் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் மக்கள் எரிபொருள் நிரப்புவதற்கு குவிந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

(படப்பிடிப்பு: எஸ்.றொசேரியன் லெம்பேட்)

மன்னாரில்

# அரியவகை ஆந்தை மீட்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார், கோந்தை பிட்டி பகுதியில், நேற்றைய தினம் (15), இராணுவத்தினரின் உதவியுடன் தகர்க்கப்பட்ட நீர் தாங்கியில் இருந்து, அரியவகை வகை ஆந்தை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வகை, ஆந்தை இனம் மிக அரிய வகை என்பதுடன், நீண்ட நாள்களாக குறித்த நீர் தாங்கியில் வசித்து வந்துள்ளது.

இந்நிலையில், நேற்றைய தினம், நீர்த்தாங்கியை குண்டு வைத்து தகர்த்த போது, இறக்கை ஒன்று உடைந்த நிலையில், தாங்கியின் சிதைவுகளில் இருந்து, இந்த ஆந்தை உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.



சுமார் 45 வருடங்களுக்கு முன்னர் நீர் விநியோகத்திற்கென துறைமுகங்கள் அதிகார சபையால் அமைக்கப்பட்ட குறித்த நீர்த்தாங்கி, மக்களுக்கு அச்சுறுத்தல் எனத் தெரிவித்து, அது தகர்க்கப்பட்டது.

ஆயர்களால் தனியாக நினைவுகூருதலை

# தடுத்து நிறுத்த வேண்டும்

■ க. அகரன்

ஆயர்களால் மாவீரர் வாரத்தில் இறந்தவர்களை தனியாக நினைவுகூரும் நிகழ்வை தடுத்து நிறுத்த துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர், நேற்று (15) விடுத்துள்ள ஊடக அறிக்கையிலே, இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: வடக்கு, கிழக்கு ஆயர்கள் வெளியிட்டுள்ள 'மதம் கடந்து இறந்தவர்களை நினைவு கூருவோம்' எனும் ஊடக அழைப்பு, விடுதலை அரசியல் செயற்பாட்டு தேச சிந்தனைகளைத் தகர்த்து, மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தி, அரசியல் இலாபம் தேடும் ஞானசார தேரரின் இன்னும் ஒரு வடிவமாக அமைந்து விடக்கூடாது என்பதுவே தமது எதிர்பார்ப்பு.



தமிழர்களை அடக்கி, அவர்களின் அரசியலைப் பூண்டோடு தகர்த்து விட்டோம் என வருடந்தோறும் வெற்றி விழா எடுப்பவர்கள், முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத, மதவாத சிந்தனையை கொம்பு சீவி, வன்முறையை தூண்டிவிட்டனர். இதில் ஞானசார தேரரின் பங்கு மிக அதிகமானது. அதில் அரசியல் குளிர்காய்ந்ததோ வேறு சிலர்.

இவர்களின் அடிவருடிகளுக்கு, வடக்கு, கிழக்கில் உள்ள இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்கும் நோக்கமும் உள்ளது.

தேச விடுதலை, அரசியல் செயற்பாட்டு பயணத்தை சிதைக்க வேண்டும் என்பதே, இதன் உள்நோக்கமாகும். இதற்காக முன்னெடுத்த முயற்சிகளில் தோல்வி கண்ட நிலையில், தமிழர்களின் உயிரோடு கலந்த மாவீரர் வாரத்தில் கைவைத்து விட்டனரோ என்று சிந்திக்கத் தோன்றுகின்றது.

அண்மையில், ஞானசார தேரர் மடு பிரதேசத்தில் மக்களின் காணிப் பிரச்சினையை தீர்ப்பதாகக் கூறிச் சென்றபோது, வழியில் மலர் தூவி வரவேற்றனர். இது, மதங்களுக்கிடையிலான முரண்பாட்டை மலர் தூவி வரவேற்பதற்கு ஒப்பாகும். அதனைத் தொடர்ந்தே, ஆயர்கள், மதம் கடந்து இறந்தவர்களை நினைவு கூருவோம் என்று தனித்து முடிவெடுத்தனர். எனவே, வடக்கு, கிழக்கு ஆயர்கள், வெளி சக்திகளின் அரசியல் தேவைகளுக்கு இடமளிக்காது, மக்களின் குரலுக்கு செவிமடுத்து மக்களோடு பயணிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்" எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்படுள்ளது.

கொட்டகஹபிட்டியவில் மண்சரிவு எச்சரிக்கை:

# இருபது குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ

கொத்மலை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கொட்டகஹபிட்டிய கிராமத்தில் மண்சரிவு ஏற்படக் கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதால், அந்தக் கிராமத்தில் இருந்து 20 குடும்பங்கள் தற்காலிகமாக அவர்களது உறவினர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என, நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரஞ்சித் அழஹகோன் தெரிவித்துள்ளார்.

கொத்மலை பிரதேச செயலாளர், கொத்மலை இராணுவ முகாமின் கட்டளையிடும் அதிகாரி உள்ளிட்டவர்கள் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள கிராமத்துக்கு கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டதாகவும் இதன்போது, அந்தக் கிராமத்தின் பல இடங்கள், வீடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.





கொத்மலை நீர்த்தேக்கத்தின் மேல் பகுதியில் அமைந்துள்ள குறித்த கிராமத்தில் 60 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில், அக்கிராமம் மண்சரிவு ஏற்படும் ஆபத்துள்ள கிராமமாக அடையாளம் காணப்பட்டிருந்தாலும், இதுவரை அக்குடும்பங்களை அங்கிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை தேசிய கட்டட ஆய்வு நிலைய அதிகாரிகள், குறித்த கிராமத்துக்குச் சென்று ஆய்வுகளை முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரவு – செலவு திட்டம் மலையக மக்களை ஏமாற்றியுள்ளது

## ஆனந்தகுமார் கவலை



2022ஆம் நிதியாண்டுக்காக நிதியமைச்சர் பெசில் ராஜபக்‌ஷவால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு - செலவு திட்டம் ஒரு புஷ்வாணத்தைப் போன்றது என தெரிவித்துள்ள ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார், இதில் மலையக மக்களுக்கு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும் எவ்வித ஆக்கபூர்வமான அறிவிப்புக்களும் இடம்பெறவில்லை என்றார்.

வரவு - செலவு திட்ட பற்றாக்குறை என்பது இமாலய தொகையாக உள்ளது. நாடு எதிர்கொண்டுள்ள இந்த நெருக்கடியான சூழல், அரசாங்கம் மேலும் மேலும் கடன்களை பெறும் விதத்திலேயே வரவு - செலவு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் மக்களின் வாழ்க்கை செலவும் பாரிய அளவில் அதிகரிக்கும்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவு உயர்வடைந்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதுடன் வரவு - செலவு திட்டதிலும் எவ்வித அறிவிப்புகளும் இல்லை. மலையகத்தில் லயன்களை இல்லாதொழிப்பதற்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். இது மிகக்குறைந்த நிதியே என்பதுடன், இத்தொகையை கொண்டு 400 வீடுகளைக் கூட கட்டமுடியாது. ஒதுக்கிய இந்நிதியைக் கூட இவர்கள் மலையகத்திற்கு செலவிடுவார்களா என்ற சந்தேகம் எமக்கு உள்ளது என்றார்.

நக்கிள்ஸ் சுற்றுலா வலயத்துக்கு

# படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்

■ மொஹொமட் ஆஸிக்

பன்விலை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட நக்கிள்ஸ் சுற்றுலா வலயத்துக்கு, தற்போது உள்ளூர் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வார இறுதியில் பஸ் வண்டிகளிலும் தனிப்பட்ட வாகனங்களிலும் சுற்றுலா பயணிகள் அதிகம் வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் இவ்வாறு வரும் சுற்றுலாப் பயணிகள், சுகாதார வழி முறைகளைப் பின்பற்றுவது மிகவும் குறைவு எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கூட்டாக வரும் சுற்றுலா பயணிகள் முகக் கவசம் கூட அணியாமல் நடமாடுவதாகவும் ஒன்றாக ஆற்றில் குளிப்பதாகவும் தெரிவிக்கும் அவர்கள், இதனால் தமது கிராமத்திற்கும் சுகாதார அச்சுறுத்தல் உள்ளதாக தெரிவிக்கின்றனர். எனவே, அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.








# எரிபொருளுக்காக நீண்ட வரிசை...

15 நாள்களுக்குத் தேவையான எரிபொருள் மாத்திரமே கையிருப்பில் இருப்பதாக வெளிவரும் தகவல்களால், நுவரெலியாவில் உள்ள ஒவ்வோர் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நீண்ட வரிசையில் காணப்படுகின்றது. (டி.சந்ரு )

குடிநீரின்றி அவதியுறும்

# உக்குவளை பிரதேச மக்கள்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

உக்குவளை, எல்கடுவ நீர் திட்டம் ஊடாக இரண்டு வாரங்களுக்கு மேலாக நீர் விநியோகிக்கப்படாமையால் 1,000 குடும்பங்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

குறித்த நீர்திட்டம் ஊடாக உடங்கமுவ, லேலியம்ப, ஹுனுகெட்டி, தெஹிதெனிய, ரத்வத்தை பீ குடியிருப்பு திட்டம் உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த 1,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீரின்றி அவதியுறுகின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியும் இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும் குடிநீர் திட்டத்தில் மறுசீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றமையே, இந்தப் பிரச்சினைக்கான காரணம் என்றும் விரைவில், குடிநீர் பிரச்சினை நிவர்த்தி செய்யப்படும் என உக்குவளை பிரதேச சபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்து

# நயப்பன மக்கள் வீதிக்கு இறங்கினர்

■ எஸ்.கணேசன்

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், பட்ஜட் ஊடாக மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை எனவும், உரப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை மையப்படுத்தி புஸ்ஸலாவ நயப்பன தோட்ட தொழிலாளர்களும் பிரதேச சபை உறுப்பினர்களும் நேற்று முன்தினம் (14) கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

புஸ்ஸலாவ நயப்பன தோட்டத்தில் முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான ஆர்ப்பாட்டத்தில், தோட்ட தொழிலாளர்கள், தமிழ் முற்போக்கு கூட்டணியின் உடபளாத பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

“அத்தியாவசியப் பொருட்களின் விலையை உடனடியாகக் குறைக்கவும். வரவு - செலவுத் திட்டத்தில் மலையக மக்களுக்கு எதுவும் இல்லை. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்களின்



தொழில் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் உரம் வழங்க வேண்டும். அதற்கான விசேட பொறிமுறை அவசியம்” எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

மலையக மக்களுக்காக தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து

# கரம் கோர்த்துச் செயற்பட வேண்டும்

பெருந்தோட்ட மலையக தொழிலாளர்களின் இருப்பையும் உரிமையையும் பாதுகாத்துக்கொள்ள மலையக அரசியல்வாதிகள் தொழிற்சங்கங்கள் என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து கரம் கோர்த்து செயற்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தோட்டத் தொழிலாளிகள் ஏதோ ஓர் இடத்தில் பாதிப்படைந்து



கொண்டே இருக்கின்றார்கள்.

முறையான வேலை வழங்கப்படுவதில்லை. நாட்டினுடைய முதுகெலும்பாக நின்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற பெருந்தோட்ட மலையக மக்களின் இருப்பையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு அனைத்து மலையக அரசியல்வாதிகள் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

இன்று அதிபர், ஆசிரிய தொழிற்சங்கங்கள் அவ்வாறு ஒன்றிணைந்து செயற்பட்டு அதன் விளைவுதான் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. பெருந்தோட்ட மலையக மக்களை, தொடர்ந்து வஞ்சித்து கொண்டிருக்கும் பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கு தகுந்த பதிலடி தருவதற்கு தொழிற்சங்கங்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதே முறையான தீர்வாகும் என்றார்.

கம்பளை பல்பொருள் அங்காடியில்

# பல இலட்சம் ரூபாய் பண மோசடி

## காசாளர்கள் ஐவர் கைது

■ நவி

நான்கு மாதங்களுக்கு மேலாக, பல இலட்சம் ரூபாய் பணமோசடியில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் கம்பளை நகரில் பிரபல சுப்பர் மார்கட் ஒன்றின் பணியாளர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கம்பளை, மலபார் வீதியில் அமைந்துள்ள குறித்த சுப்பர் மார்கட்டின் உரிமையாளர், கம்பளை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே, சந்தேகநபர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சனக் கூட்டமான நேரங்களில் பொருட்கள் கொள்வனவு செய்யவரும் பல வாடிக்கையாளர்களுக்கு சிட்டைகளைக் கொடுக்காது, பொருள்களைக் கொடுத்தே, மேற்படி பணமோசடி செய்து வந்துள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவதுள்ளது

சிட்டைகள் கொடுக்காமை குறித்து வாடிக்கையாளர்களிடமிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சுப்பர் மார்கட் உரிமையாளருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினையடுத்து, பாதுகாப்பு கெமராக்களைச் சோதித்துப் பார்த்த போதே, மேற்படி பணமோசடி தெரியவந்ததை அடுத்து உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கம்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கபில பண்டாரவின் ஆலோசனைக்கமைய நேற்று (15) காலை கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் தொடர்ந்து, விசாரைணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சம்பளத்தைக் கோரி குமாரவத்த தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்

■ சுமணசிறி குணதிலக

அரச பெருந்தோட்ட யாக்கத்துக்கு சொந்தமான மொனராகலை, குமாரவத்த தோட்டத் தொழிலாளர்கள், நேற்று (15) தமது மாதாந்த சம்பளத்தைக் கோரி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மொனராகலை- வெல்லவாய வீதியின் வெல்லச்சிகடை முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கறுப்புக் கொடியை எந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இந்த மக்கள், ஒக்டோபர் மாதத்துக்கான தமது சம்பளத்தை முழுமையாக வழங்க வேண்டும் என கோரிக்கையையும் முன்வைத்தனர்.

அத்துடன் தமது சம்பளத்தை முழுமையாக வழங்கும் வரை, பணிகளுக்கு செல்லப் போவதில்லை என்றும் தெரிவித்தும் சுமார் 1 மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மொனராகலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ். கோவிந்தராஜ், இந்த விடயம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்டவர்களின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாகவும், குமாரவத்த தோட்டத் தொழிலாளர்களுக்கு முழுமையான சம்பளம் கிடைக்கும் வரை தொடர்ச்சியாக இவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றார்.



# கபடத்தனமான சூழ்ச்சிகளைக் கைவிடுவதே முரண்பாடுகளைக் களையும்

ஓர் இனம், தங்களுக்கு உரித்துடைய மண்ணில், நிம்மதியாகவும் மொழி, கலாசாரம் உள்ளிட்ட அடையாளங்களுடன் வாழவேண்டுமாயின், அங்கு இனப்பரம்பலைச் சீர்குலைக்கும் வகையில், எவ்விதமான இடைச்செருகல்களையும் முன்னெடுக்காமல் இருப்பதே சாலச் சிறந்ததாகும்.

எனினும், எமது நாட்டைப் பொறுத்தவரையில், தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும், வடக்கு, கிழக்கில், இனப்பரம்பலைச் சீர்குலைக்கும் செயற்பாடுகள், மிக நாசூக்காகவும் பகிரங்கமாகவும் முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வாறான செயற்பாடுகள் அரங்கேற்றப்படும் போதெல்லாம், எதிர்ப்புக் குரல்களும் மேலோங்கி நிற்கின்றன.

பல்லினங்கள் வாழும் இந்நாட்டில், சகல இனங்களினதும் மொழி, கலாசாரம், பண்பாடு போன்ற அம்சங்களை, அப்படியே கடைப்பிடிப்பதற்கு வழிசமைக்க வேண்டும். வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் சிறுபான்மையினர், மேற்சொன்னவற்றை அப்படியே முன்னெடுக்கின்றனரா என்றால் அதுதான் இல்லை.

சிற்சில இடங்களில், செருகல்கள் நடந்துள்ளன. அதில், பிரதானமானவையாக மத கலாசாரத்துக்குள் கலப்படம் செயற்படுகின்றது. பிரபல்யமான இந்துக் கோவில்களுக்கு அண்மையில், விஹாரைகள் முளைத்துவிடுகின்றன.

யுத்தத்துக்குப் பின்னர், பலவந்தமாகக் காணிகளை அபகரித்தல், தொல்பொருள் ஆராய்ச்சி எனும் போர்வைக்குள் சிங்கள குடியேற்றங்கள் என்பனவற்றைக் கூறமுடியும்.

அதேபோன்ற மற்றுமொரு செயற்பாடுதான், வவுனியா மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. அங்கு, அண்மித்த மாவட்டங்களைச் சேர்ந்த தனிச் சிங்கள கிராமங்களை, தமிழ் கிராமங்களுடன் இணைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இது, இனங்களுக்கு இடையில் வேண்டுமென்றே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் கபடத்தனமான செயற்பாடாகும். இவ்வாறான செயற்பாடுகளைக் கைவிடுவதன் ஊடாகவே, இன நல்லுறவைப் பேணமுடியும். இல்லையேல், பூர்வீகத்துக்கு அர்த்தம் தேடியலைய வேண்டிய நிலையே ஏற்படும்.

இனப்பரம்பலைச் சீர்குலைக்கும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போதெல்லாம், "எங்கள் நிலம் எமக்கு வேண்டும்", "தொல்பொருள் திணைக்களமே வரலாற்றைத் திரிபுபடுத்தாதே", "அதிகார இனவெறியைத் தமிழர்கள் மீது காட்டாதே", "சிங்களக் குடியேற்றத்தை நிறுத்து" போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டு எதிர்ப்புகள் காண்பிக்கப்படும்.

ஆனாலும், இனப்பரம்பலைச் சீர்குலைக்கும் வகையிலான முன்னெடுப்புகளை, ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்கள் கைவிடுவாதாய் இல்லை. எனினும், பூர்வீக பூமியில் வாழ்வோரும், அவர்களோடு இணைந்த மக்கள் பிரதிநிதிகளும், போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

சிறுபான்மை இனத்தவர்கள் செறிந்துவாழும் மாவட்டங்களில், இனப்பரம்பலைச் சீர்குலைக்கும் செயற்பாடுகள், மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

அதுமட்டுமன்றி, அம்மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழ்வோருக்கு ஒவ்வொரு துறைகளிலும் கிடைக்கும் கோட்டா எண்ணிக்கை குறையும். இவையெல்லாம் எதிர்காலத்தில் ஒரு மனக்கசப்பை தோற்றுவித்துவிடும் என்பதால், கபடத்தனமான சூழ்ச்சிகளைக் கைவிடுவதே சாலச் சிறந்ததாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நல்ல எண்ணங்களின் எதிர்மறை, வஞ்சக நடத்தைகள் ஆகும். தாங்கள் நினைத்த காரியங்கள் எதுவும் நடக்காமல் இருக்கும்போது, அறிந்தவர், தெரிந்தவர் சிறப்பான வாழ்க்கையை வாழும்போது, சில நபர்களுக்குப் பொறாமை வந்துவிடுகின்றது.

இந்நிலை தொடர்ந்தால், அதுவே வஞ்சக எண்ணத்தை மனத்துக்குள் புகுத்திவிடும்.

இதன்விளைவால், பிறருக்கு எதிரான செயற்பாடுகளில் கூசாமல் ஈடுபடுகின்றார்கள். ஒருவர் நல்ல காரியங்களைச் செய்தால், அதற்கு முரணான செயற்பாடுகளை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் செய்ய முனைப்புடன் இயங்குவார்கள்.

இத்தகைய செயலுடன் ஆணவமும் இணைந்துவிடுகின்றது. 'இவர்கள் எல்லோரும் யார்? என்னைவிட இவர்களுக்கு என்ன தெரியும்' என எண்ணிக் கொள்வார்கள்.

மனப்புரள்வு ஏற்பட்ட நபர்கள் போல, சிலரது நடத்தைகள் இருக்கும். சிறப்பு எது, கேடு எது எனப் பகுத்தறியத் தெரியாமல் பலர் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அறிவுசால் பெரியோர்களுடன் பழகாமலும் மேலாதிக்க உணர்வுடையவர்களுடன் அறிவுரை பகரமுடியாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# முஸ்லிம் அரசியல்வாதிகள் யாரை ஏமாற்றுகின்றார்கள்?

மொஹமட் பாதுஷா

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களோடு தொடர்புடைய இரண்டு செய்திகள் வெளியாகியுள்ளன.

முதலாவது செய்தியில், "மக்கள் எதிர்பார்த்த எதுவும் இல்லாத, வரவு செலவுத் திட்டமாகவே இது அமைந்திருக்கின்றது" என்று, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது செய்தியில், அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வரவு செலவுத் திட்டத்துக்கும் ஆதரவளிக்க உள்ளதாகத் தெரியவருகிறது. மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனும் கிட்டத்தட்ட இதே நிலைப்பாட்டிலேயே இருப்பார் என அனுமானிக்கலாம்.

தலைவர்கள் இப்படியிருக்கையில், கட்சியின் உறுப்பினர்கள் அதற்கு முரணாகச் சிந்திப்பது, அல்லது முஸ்லிம் எம்.பிக்கள் இதனை இவ்விதம் நோக்குகையில், ஹக்கீம் போன்ற தலைவர்கள் வேறு கோணத்தில் நோக்குவதும், இரண்டு பார்வைக்கும் பின்னர் காரணங்கள் கூறுவதும் என்ன வகையான அரசியல் என்றுதான் புரியவில்லை.

நாட்டு மக்கள், பெரும் நெருக்கடிகளுக்குள் அகப்பட்டுள்ளனர். அதிலிருந்து வெளியில் வர முடியாதவாறு, வாழ்க்கைச் சுமை அவர்களை அழுத்திப் பிடிக்கின்றது. எனவே, இந்த பட்ஜெட்டில் கொஞ்சமாவது நிவாரணம் கிடைக்கலாம் என்று மக்கள் எதிர்பார்த்திருந்தார்கள்.

2022ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டைத் தயாரித்த போது, மக்கள் மீது சுமையை ஏற்றக் கூடாது என்பதில், மிகக் கவனமாக இருந்ததாக நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், குறிப்பிட்டுச் சொல்லும்படியான நிவாரண முன்மொழிவுகளை, அரசாங்கம் முன்வைக்கவில்லை என்ற விடயம் பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்தக் காரணங்களுக்காக, முஸ்லிம் எம்.பிக்கள் இந்தப் பட்ஜெட்டை எதிர்க்க வேண்டும் என்று, இப்பத்தி வலியுறுத்தவில்லை. இவர்கள் ஐந்தாறு பேர் எதிர்ப்பதாலோ ஆதரிப்பதாலோ, பெரிதாக எதுவும் நடந்து விடப் போவதில்லை.

யாரை எப்படி வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்பது, ராஜபக்ஷர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, பட்ஜெட் என எழுதப்பட்ட ஒரு வெறும் பெட்டியைத்தான் கொண்டு வந்தாலும் (பலமான ஓர் எதிர்க்கட்சி இல்லாத சூழலில்) அதனை வெற்றிபெறச் செய்யும் கலை, அவர்களுக்குத் தெரியும். இந்த விடயத்தில், முஸ்லிம் எம்.பிக்கள் ஒரு பொருட்டல்ல!

இதற்கு முன்னைய காலங்களில், முஸ்லிம் எம்.பிக்கள் எடுத்த முரண்நகைத் தீர்மானங்களுக்கு ஓர் உதாரணமாகவே, இங்கே இவ்விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம், இன்றைய அரசாங்கம் உள்ளடங்கலாக, பல அரசாங்கங்களில் சட்டத் திருத்தங்கள், பிரேரணைகள், தேசிய அரசியல் சார்ந்த முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்ட வேளையில், ஒவ்வொரு முஸ்லிம் கட்சியும் அணியும் வெவ்வேறு நிலைப்பாடுகளையே எடுத்தன. சமூகத்துக்காகவே இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக, இரண்டு தரப்பும் கூறியது.

இந்தப் போக்கு விஸ்வரூபம் எடுத்து, கட்சிக்குள் இரு நிலைப்பாடுகளை எடுக்குமளவுக்கு நிலைமைகள் மாறியிருக்கின்றன. கடந்த ஏழெட்டு வருடங்களில், இதுதான் 'ட்ரெண்ட்' ஆக ஆகியிருக்கின்றது.

ஆனால், இவ்வாறு இரு வேறு பார்வைக் கோணங்களில் தீர்மானங்களை எடுக்கும் அரசியல்வாதிகள், தமது நகர்வு முஸ்லிம் சமூகத்தின் நன்மைக்கே என்று கூறுகின்றனர். அதைச் சமூகத்தின் பெரும்பாலான தரப்பினர் நம்புகின்றனர்; அவர்களுக்கு வேறு வழியில்லை.

இப்படியான நிறையச் சம்பவங்களைப் பட்டியலிட முடியும். இதற்கு மிகப் பிந்திய நல்ல உதாரணம், அரசியலமைப்பின் 20ஆவது திருத்தமாகும்.

20 திருத்த வாக்கெடுப்பின் போது, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் எதிர்த்து வாக்களித்தார்கள். முஷாரப் எம்.பி 20 இனை மேலோட்டமாக எதிர்த்து விட்டு, அதில் உள்ளடங்கியிருந்த இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பான ஏற்பாட்டை ஆதரித்தார். இவ்விரு கட்சிகளின் ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் தலைவருக்கு மாற்றமான முடிவை எடுத்தனர்.

இங்கே, ஆதரிப்பதோ எதிர்ப்பதோ பிரச்சினையல்ல; அது வேறுவிடயம். ஆனால், ஒரு கட்சிக்கு (கொள்கை என்று ஏதாவது இருந்தால்) இரு கொள்கைகள் இருக்க முடியாது. எனவே, இரு நிலைப்பாடுகளும் எடுக்கப்பட முடியாது.

இவ்வளவு நடந்த பிறகும், அவர்கள் எல்லோரும் ஒரே கட்சியில் தலைவர்களாகவும் உறுப்பினர்களாகவுமே இருக்கின்றார்கள். ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் போவதாக, கட்சி சார்பாக அறிக்கைகள் வெளியாகின.

ஆனால், தலைவரின் விருப்பமின்றித் தாம் இந்த முடிவை எடுக்கவில்லை என்ற கருத்தை, சம்பந்தப்பட்ட எம்.பிக்கள் சாடை மாடையாகக் கூறத் தொடங்கியதும் வழக்கம்போல, எல்லாம் அடங்கி விட்டது.

சாதிக்க முடியாததை எல்லாம் செய்து காட்டும் கலைதான் அரசியல் என்று, முஸ்லிம் அரசியல்வாதிகள் சொல்வதுண்டு. ஆனால், செய்யக் கூடியவற்றைக் கூட, காத்திரமாகச் செய்யத் தவறிய வரலாறுகளே அதிகமுள்ளன. ஆகமொத்தத்தில், மக்களைச் சிறப்பாக ஏமாற்றும் கலையே இன்று, 'அரசியல் சாணக்கியம்' என்றாகியிருக்கின்றது.

சரி! முஸ்லிம் அரசியல்வாதிகள் எல்லாம், சமூகத்திற்கான தீர்மானம் என்று சொல்வதே உண்மையாகவே இருக்கட்டும் என்று வைத்துக் கொள்வோம்.

அப்படியாயின், முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவரின் அகால மரணத்திற்குப் பிறகு, அக் கட்சியின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டு, பின்னர் தலைவரான ரவூப் ஹக்கீம், இணைத் தலைவர்களுள் ஒருவரான திருமதி பேரியல் அஸ்ரப், அதன் பின்னர் கட்சிகளைத் தொடங்கிய ரிஷாட் பதியுதீன், ஏ.எல்.எம். அதாவுல்லா உள்ளடங்கலாக, கடந்த 20 வருடங்களில் மக்கள் பிரதிநிதிகளாக இருந்தவர்கள், இவ்வாறான நகர்வுகளின் மூலம், சமூகத்துக்கு எதைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள், என்ன சாதனையை நிகழ்த்தி இருக்கின்றார்கள்?

ஒன்றுக்கும் உதவாதவர்கள் கூட, நாடாளுமன்ற உறுப்பினராகியது; அமைச்சு, பிரதியமைச்சுப் பதவிகளை வகித்தமை; பணம், பொருள் சம்பாதித்தமை; அதிகாரத்தையும் வரப் பிரசாதங்களையும் சுகித்தமை என, முஸ்லிம் கட்சித் தலைவர்களும் அனைத்து எம்.பிக்களும், முஸ்லிம் சமூகத்துக்கு ஒருசில அபிவிருத்திகளைத் தவிர, வேறு எதைச் செய்திருக்கின்றார்கள்?

இன்றைய யதார்த்தத்தின் படி, அரசாங்கத்தை எதிர்த்து முஸ்லிம்கள் அரசியல் செய்வது, அவ்வளவுக்கு நடைமுறைச் சாத்தியமில்லை. ஏனெனில், அதற்கு ஏற்ற வகையில், தமிழ்த் தேசியத்தைப் போல, முஸ்லிம் தேசிய அரசியல் பலமாக அடித்தளமிடப்படவில்லை.

இந்த நிலையில், இணக்க அரசியல் நல்ல தெரிவாக அமையும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அந்த இணக்க அரசியலின் நன்மைகளை, சம்பந்தப்பட்ட எம்.பிக்கள் தலைவர்கள் மட்டுமன்றி, மக்களும் அனுபவிக்க வழி செய்ய வேண்டும்.

முஸ்லிம் சமூக அரசியல், இப்போது வெகுவாக மாறிவிட்டது. 1990களில் இருந்த சிந்தனையோட்டமும் தெளிவும் இப்போது இல்லை. அரசியல்வாதிகளுக்கு மட்டுமன்றி, உள்ளூரில் இருக்கின்ற இணைப்பதிகாரிகளுக்கு கூட, மேல் மட்டத்தில் இருந்து பதவி, பணம், வெகுமதி என ஏதாவது கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணமுள்ளது.

அதுமட்டுமன்றி, சில பிரதேசங்களின் வாக்காளர்கள் கையில், அதிகாரமும் 'பசை'யும் உள்ள அரசியல்வாதிகளை, கண்மூடித்தனமாக நம்புகின்ற போக்கு, கடந்த பல வருடங்களாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதாவது, முஸ்லிம்கள் ஒரு சமூகமாகச் சிந்தித்து, தமது அரசியல்வாதிகளைத் திருத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கு முன்வரவில்லை என்பது கண்கூடு.

அதற்கு மாறாக, ஏமாற்றுக்காரர்கள், சமூக சிந்தனையற்றவர்கள், இவர்கள் நல்லது எதுவுமே செய்யமாட்டார்கள் என்று நன்றாக அறியப்பட்டவர்கள் போன்றோரை, முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்கின்றது; தலைவர்களாக வைத்துக் கொண்டுள்ளது.

சாரதியும் நடத்துநரும் சரியில்லை என்று நன்றாகத் தெரிந்த பிறகும், அந்த பஸ்ஸில் இருக்கின்ற சொகுசான ஆசனங்களுக்காக, அதில் ஒலிக்கின்ற இடைக்காலப் பாடலுக்காக, ஆசுவாசமாக ஏறி அமர்ந்திருக்கும் பயணிகளைப் போல, முஸ்லிம்களைக் கருதலாம்.

முஸ்லிம் சமூகத்துக்காகவே தமது அனைத்துத் தீர்மானங்களும் நகர்வுகளும் எடுக்கப்படுகின்றன என்று கூறுகின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள், அதன் பிரதிபலனை சமூகத்துக்குப் பெற்றுக் கொடுத்தாகத் தெரியவில்லை. இத்தகைய போக்கைப் படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை, யாரும் தட்டிக் கேட்டதாகவும் தெரியவில்லை.

அப்படியென்றால், முஸ்லிம் அரசியல்வாதிகள் யாரைப் 'பேய்க்காட்டி'க் கொண்டிருக்கின்றார்கள்? அரசாங்கத்தையா, பெருந்தேசியத்தையா, முஸ்லிம் சமூகத்தையா, மனச் சாட்சியையா? அல்லது, அவர்கள் தங்களைத் தாமே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்களா?

ஆனால், ஒன்று மட்டும் நினைவிருக்கட்டும்! ஏமாறுவதை விட, நாம் ஏமாற்றப்படுகின்றோம் என்பதை, ஒரு சமூகம் உணராமல் இருப்பதுதான், மிகப் பெரிய கைச்சேதமாகும்.

## கடிதங்கள்

### கடலரிப்பால் மறையும் மூதூர் நிலங்கள்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கடற்கரையோரப் பிரதேசங்களில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பின் காரணமாக, நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்து வருவதோடு, அங்குள்ள மீனவத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களும் பாரிய இடர்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன், கருவாட்டு வாடி உற்பத்தியாளர்களின் பெறுமதியான தொழில் தளங்கள், கடலுக்கு இரையாவதோடு அரச பொதுக்கட்டடங்களும் நாளாந்தம் சேதமாக்கப்பட்டு வருவதாக, அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மூதூர் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடலரிப்பின் காரணமாக, இதுவரைக்கும் 400 மீட்டர் வரையிலான நிலப்பகுதிக்குள் கடல் உட் புகுந்துள்ளதாக அப்பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

2003 காலப்பகுதியில் கரையோரைப் பகுதிகளில் கம்பியினாலான கூடுகளில் கற்கள் இடப்பட்டு, கரையை நோக்கி 70 மீற்றர் வரையான பகுதிகளில் நிலத்தைத் தோண்டி, கற்கூடுகள் வைக்கப்பட்டன. ஆனால், அது வெற்றியளிக்க வில்லை. சுனாமி காரணமாக கற்கூடுகள் சேதமாக்கப்பட்டதோடு, கடற்கரையின் கடினமான தட்டுகளும் அரிக்கப்பட்டதாலும் ஒரேயடியாகக் கடற்கரையின் சுமார் 75 மீற்றர் தூரம் கடலுக்குல் உள்ளீர்க்கப்பட்டது.

இவ்வாறு தொடருமானால், மூதூர் கடற்கரையோரப் பிரதேசங்கள், பெரிதும் பாதிப்படையக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

-எப். முபாரக்

# வில்லனாக அஜித்?

நேர்கொண்ட பார்வை திரைப்படத்தின் வெற்றியை தொடர்ந்து, போனிகபூர் - அஜித் - எச்.வினோத் கூட்டணி மீண்டும் இணைந்து வலிமை திரைப்படத்தை தற்போது உருவாக்கி இருக்கிறார்கள்.

இந்தத் திரைப்படப்பிடிப்பு முடிந்து பின்னணி வேலைகள் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. ஜனவரி மாதம் பொங்கல் பண்டிகைக்கு வெளியிட உள்ளார்கள்.

அடுத்ததாக அஜித் நடிக்க உள்ள 'தல 61' திரைப்படத்தையும் எச். வினோத் தான் இயக்க உள்ளார். போனி கபூர் தான் தயாரிக்க உள்ளார். ஆரம்பக்கட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகிறன.

இந்நிலையில், இந்தத் திரைப்படத்தில் நடிகர் அஜித் வில்லனாக நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கெனவே மங்காத்தா, பில்லா போன்ற திரைப்படங்களில் வில்லனாக நடித்து ரசிகர்களை கவர்ந்த அஜித், தற்போது மீண்டும் அவ்வாறு நடிக்க உள்ளதாக கூறப்படுவதால், எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது.



சென்னை

# "தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டும்"

திருப்பதியில் நடைபெற்ற தெற்கு மண்டல கவுன்சில் கூட்டத்தில், "தமிழ் மொழியை இந்தியாவின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக அறிவிக்க வேண்டும்" எனவும், "திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும்" என்றும் முதலமைச்சர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

திருப்பதியில் 29வது தெற்கு மண்டல கவுன்சில் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் சார்பில், உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி பங்கேற்றார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

"மழையால் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்க வேண்டியிருந்ததால் கூட்டத்தில் பங்கேற்க இயலவில்லை.

உலகின் மிகவும் பழைமையான மொழிகளுள் ஒன்றான தமிழ், இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தேசிய மொழியாக இருக்கிறது. எனவே, தமிழ்மொழியை இந்தியாவின் ஆட்சிமொழிகளுள் ஒன்றாக அறிவிக்க வேண்டும்.

அதேபோல், திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும். தமிழகத்தின் மின் உற்பத்தி திட்டங்கள் பலவற்றுக்கு மத்திய அரசாங்கம் இன்னும் அனுமதி வழங்கவில்லை. சமூக பாதுகாப்புத் திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் தமிழகம் முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது. அதேநேரத்தில் மாநிலங்களுக்கு இடையேயான தேவையற்ற வழக்குகள், பகைமை உணர்வு ஆகியவற்றால் வளர்ச்சி பாதிக்கப்படும். இத்தகைய பிரச்சினைகளுக்கு அன்பெனும் பொது மொழி கொண்டு தீர்வு கண்டு முன்னேற்றப் பாதையில் நடைபோடுவோம்" என்று ஸ்டாலின் உரையாற்றினார்.





## நடிகர் விஜய் வீட்டில் நள்ளிரவில் சோதனை



சென்னை நீலாங்கரையில் உள்ள நடிகர் விஜய் வீட்டில் வெடிகுண்டு உள்ளதாக, பொலிஸ் கட்டுப்பாட்டு அறையை நேற்று முன்தினம் இரவு தொடர்பு கொண்ட மர்ம நபர் மிரட்டல் விடுத்தார்.

அந்த மிரட்டல் அழைப்பை தொடர்ந்து வெடிகுண்டு நிபுணர்கள் நடிகர் விஜய்யின் வீட்டுக்கு நள்ளிரவு விரைந்து சென்று சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் ஒரு புரளி என தெரியவந்தது. இதையடுத்து பொலிஸ் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது யார் என பொலிஸார் அதிரடி விசாரணை மேற்கொண்டனர்.

அதில் விழுப்புரத்தை சேர்ந்த நபர் ஒருவர் கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு நடிகர் விஜய் வீட்டில் வெடிகுண்டு உள்ளது என பொய்யான மிரட்டல் விடுத்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த நபர் ஏற்கெனவே பல்வேறு அரசியல் தலைவர்கள் மற்றும் சினிமா பிரபலங்களின் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளது பொலிஸ் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது.

## அதர்வாவின் போட்டி

16ஆம் நூற்றாண்டில் கேரளாவில் வாழ்ந்த கடற்படை தலைவர்கள் குஞ்சலி மரைக்காயர் என்று அழைக்கப்பட்டனர். இவர்களில் 4ஆவது குஞ்சலி மரைக்காயர் வீர தீரம் நிறைந்தவராக போற்றப்பட்டார்.

அவரது வாழ்க்கையை மையமாக வைத்து 'மரைக்காயர் அரபிக்கடலின் சிங்கம்' என்ற திரைப்படம் தயாராகி உள்ளது. ரூ.100 கோடி செலவில் பிரம்மாண்டமாக தயாராகி இருக்கும் இத்திரைப்படத்தை பிரியதர்ஷன் இயக்கியுள்ளார்.

இதில் குஞ்சலி மரைக்காயர் வேடத்தில் மோகன்லால் நடித்துள்ளார். நடிகைகள் கீர்த்தி சுரேஷ், மஞ்சு வாரியர் ஆகியோர் நாயகிகளாக நடித்துள்ளனர். மேலும் அர்ஜுன், சுனில் ஷெட்டி, அசோக் செல்வன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி உள்பட 5 மொழிகளில் தயாராகி உள்ள இத்திரைப்படம் வருகிற டிசெம்பர் 2 திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்த நிலையில், அத்திரைப்படத்துக்கு போட்டியாக அதர்வா நடிப்பில் உருவாகியுள்ள 'தள்ளிப்போகாதே' திரைப்படம் வெளியாக உள்ளது. இப்படம் டிசம்பர் 3 திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

ஆர்.கண்ணன் இயக்கி உள்ள இத்திரைப்பட்த்தில் அதர்வாவுக்கு ஜோடியாக பிரபல மலையாள நடிகை அனுபமா பரமேஸ்வரன் நடித்துள்ளார்.



## வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி

தமிழ் திரையுலகில் பிசியான நடிகராக வலம் வருபவர் விஜய் சேதுபதி. இவர் நடிப்பில் தற்போது 'காத்துவாக்குல ரெண்டு காதல்' என் திரைப்படம் உருவாகியுள்ளது.

விக்னேஷ் சிவன் இயக்கியுள்ள இந்தத் திரைப்படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நயன்தாரா, சமந்தா ஆகியோர் நடித்துள்ளனர். அனிருத் இசையமைத்துள்ளார். படப்பிடிப்பு முடிந்து பின்னணி பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், 'காத்துவாக்குல ரெண்டு காதல்' திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியிடப்பட்டு உள்ளது. விஜய் சேதுபதியின் தோற்றத்துடன் கூடிய அந்த போஸ்டரில், அவரது கதாபாத்திரத்தின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி 'ரஞ்சன்குடி அன்பரசு முருகேச பூபதி ஒஹூந்திரன்' என்கிற கதாபாத்திரத்தில் அவர் நடித்துள்ளதாகவும், இந்த பெயரை சுருக்கமாக 'ரேம்போ' என அழைக்கப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

லக்னோ

மனிதர்களுக்குப்போல்

## பசுக்களுக்கும் அம்பியூலன்ஸ் சேவை

கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்ட பசுக்களுக்கு ஆம்பூலன்ஸ் சேவையை உத்தர பிரதேச அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. இதனை மாநில பால்வள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் லக்ஷ்மி நாராயண் சவுத்ரி தெரிவித்தார்.

இத்திட்டத்துக்கு 515 அம்பியூலன்ஸ்கள் தயாராக உள்ளதாகவும், இது நாட்டிலேயே முதல் முறை தொடங்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

மதுராவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "112 அவசர சேவை எண்ணைப் போலவே, இந்த புதிய சேவையானது தீவிர நோய் வாய்ப்பட்ட பசுக்களுக்கு விரைவான சிகிச்சை மேற்கொள்ள வழி வகுக்கும். ஒரு கால்நடை மருத்துவர், இரண்டு உதவியாளர்களுடன் கூடிய அம்பியூலன்ஸ் சேவையானது உதவி கோரிய 15 முதல் 20 நிமிடங்களுக்குள் வரும். டிசெம்பரில் தொடங்கும் இத்திட்டத்தின் கீழ், புகார்களைப் பெற லக்னோவில் கால் சென்டர் அமைக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

மேலும், இலவச உயர்தர விந்து மற்றும் கரு மாற்று தொழில்நுட்பம் வழங்கப்படுவதன் மூலம் மாநிலத்தின் கால்நடை இன மேம்பாட்டுத் திட்டத்துக்கு ஊக்கம் கிடைக்கும் என்று கூறிய அவர், கரு மாற்று தொழில்நுட்பம் மாநிலத்தில் ஒரு புரட்சியாக இருக்கும். ஏனெனில் இது மலட்டு மாடுகளை கூட அதிக பால் தரும் விலங்குகளாக மாற்றும் என்றும் கூறினார்.







கான்பூர்

கொரோனாவுக்குப்பின்

## டெங்கு காய்ச்சல், ஜிகா வைரஸ் பாதிப்பு

இந்தியாவில் கொரோனா பாதிப்புகள் குறைந்து வரும் நிலையில், வடமாநிலங்களில் டெங்கு காய்ச்சல், ஜிகா வைரஸ் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில், உத்தர பிரதேசத்தின் கான்பூர் நகரில் இதுவரை மொத்தம் 123 ஜிகா வைரஸ் பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.

இதனைக் கூடுதல் தலைமை செயலாளர் (சுகாதாரம்) அமித் மோகன் பிரசாத் அறிவித்துள்ளார். இவற்றில், 96 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். கன்னோஜ் நகரில் ஒருவரும், லக்னோ நகரில் 3 பேரும் கண்டறியப்பட்டுள்ளனர். தொடர்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். தொடர்பில் இருப்பவர்களை கண்டறியும் பணியிலும் ஈடுபட்டு வருகிறோம் என கூறியுள்ளார்.



சோளிங்கர்

வெள்ளத்தில் நீந்தியபடி

## சடலங்களை எடுத்துச் செல்லும் அவலம்

சோளிங்கர் ஏரியில் இருந்து உபரி தண்ணீர் வெளியேற்றப்படுவதால், அப்பகுதியிலுள்ள கால்வாயில் அதிகளவு தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. இதனால், அங்கு இறந்தவர்களின் சடலங்களை வெள்ளத்தில் நீந்தியபடி எடுத்துச் செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

சோளிங்கர் அடுத்த சோமசமுத்திரம் கொலனியில், சுமார் 1,200 பேர் வசிக்கின்றனர். இதன் அருகில், சோளிங்கர் ஏரியில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்படும் கால்வாய் உள்ளது. தரைப்பாலம் இல்லாததால், கால்வாயில் நடந்து தான் மக்கள் சோளிங்கருக்கு சென்று வருகின்றனர்.

போபால்



## பால் தர மறுத்த மாடு பொலிஸில் ஒப்படைப்பு

மத்திய பிரதேச மாநிலத்தில் நயாகான் என்ற கிராமத்தை சேர்ந்த, விவசாயிக்குச் சொந்தமான எருமை மாடு, கடந்த சில நாள்களாக பால் கறக்க விடவில்லை.

இதனால் வேதனை அடைந்த விவசாயி, பொலிஸ் நிலையத்துக்கு சென்று, புகார் செய்தார். இந்தக் காட்சி வீடியோவாக சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலானது.

இவர் புகார் கொடுத்து 4 மணி நேரம் ஆன நிலையில், பொலிஸ் உடனடி நடவடிக்கை எடுக்கவில்லையே என கருதினார் போலும். இந்த முறை, மனிதர் அந்த மாட்டைப் பிடித்துக்கொண்டு நேராக பொலிஸ் நிலையத்துக்கு போனார். "இதோ என் மாட்டையே கொண்டாந்துட்டேன். என் பிரச்சினைக்கு தீர்வு சொல்லுங்க" என்று அங்கிருந்த பொறுப்பு அதிகாரியிடம் முறையிட்டார்.

இது குறித்து தகவல் அறிந்த அந்தப் பகுதி பொலிஸ் துணை அதிகாரி, கால்நடை மருத்துவர் ஒருவரை கொண்டு அந்த கிராமவாசிக்கு உதவுமாறு பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரிக்கு உத்தரவிட்டார். மேலதிகாரி உத்தரவுக்கு இணங்க அவரும் உடனே நடவடிக்கை எடுத்தார். இப்போது அந்த மாடு பால் கறக்க அனுமதிக்கிறதாம்.

# "வயது முக்கியமல்ல"

தமிழில் முகமூடி திரைப்படத்தின் மூலம் சினிமாவில் ஹீரோயினாக அறிமுகமானார் பூஜா ஹெக்டே. அந்தத் திரைப்படத்துக்கு பின்னர் டோலிவுட்டுக்கு சென்ற அவர் அங்கு முன்னணி நடிகையாக உயர்ந்தார்.

தற்போது விஜய் நடிப்பில் உருவாகி வரும் பீஸ்ட் திரைப்படம் மூலம் கோலிவுட்டில் ரீ-என்ட்ரி கொடுக்க உள்ள பூஜா ஹெக்டே, விஜய்க்கு ஜோடியாக நடித்து வருகிறார். இதுதவிர தெலுங்கு, ஹிந்தி திரைப்படங்களையும் கைவசம் வைத்துள்ளார்.

இந்த நிலையில், நடிகை பூஜா ஹெக்டே, அண்மைய பேட்டியில் திருமணம் குறித்து பேசி உள்ளார். அப்போது அவர் கூறியதாவது: "திருமண வயது வந்துவிட்டது என்பதற்காகவோ அல்லது திருமணம் செய்து கொள்ள இதுதான் சரியான நேரம் என்பதற்காகவோ திருமணம் செய்து கொள்வது கண்டிப்பாக சரியல்ல.

வாழ்க்கை எல்லாம் சேர்ந்து இருக்க முடியும் என ஒரு மனிதரோடு இருக்கும்போது தோன்றினால் அப்போது அவரை திருமணம் செய்து கொள்ள வேண்டும். அவர்தான் வாழ்க்கைக்கு நல்ல கணவராக இருப்பார்'' என்றார்.



மும்பை

## எழுத்தாளர் புரந்தரே காலமானார்

பிரபல வரலாற்று ஆசிரியரும், மராட்டிய எழுத்தாளருமான பத்ம விபூஷன் விருது பெற்ற பாபாசாகேப் புரந்தரே 99ஆவது வயதில் நேற்றுக் காலமானார். மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜி குறித்து தனது படைப்புகள் மூலம் புகழ் பெற்றவர், பல்வந்த் மோரேஷ்வர் புரந்தரே என்கிற பாபாசாகேப் புரந்தரே. வரலாற்று ஆசிரியரும், எழுத்தாளருமான இவர், 2019ஆம் ஆண்டில் இந்தியாவின் இரண்டாவது மிக உயரிய குடிமகன் விருதான பத்ம விபூஷண் விருது பெற்றார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு வயது தொடர்பான உடல் நலக்குறைவு காரணமாக புனேவிலுள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். நேற்று அதிகாலை 5 மணியளவில் பாபாசாகேப் புரந்தரே காலமானார்.




இருபதுக்கு – 20 உலகக் கிண்ணத் தொடர்:

# முதற்றடவையாக சம்பியனான அவுஸ்திரேலியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில் முதற் தடவையாக அவுஸ்திரேலியா சம்பியனாகியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நியூசிலாந்துடனான இறுதிப் போட்டியில் வென்றே அவுஸ்திரேலியா சம்பியனாகியிருந்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஆரோன் பின்ஞ், நியூசிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார். நியூசிலாந்து சார்பாக காயமடைந்த டெவோன் கொன்வேயை டிம் செய்ஃபேர்ட் பிரதியிட்டிருந்தார்.

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, அணித்தலைவர் கேன் வில்லியம்ஸனின் தனியாவார்த்தனமான 85 (48) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜொஷ் ஹேசில்வூட் 4-0-16-3, அடம் ஸாம்பா 4-0-26-1, பற் கமின்ஸ் 4-0-27-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்த நிலையில், மிற்செல் ஸ்டார்க் நான்கு ஓவர்களில் 60 ஓட்டங்களைக் கொடுத்திருந்தார்.

பதிலுக்கு, 173 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, டேவிட் வோணரின் 53 (38), மிற்செல் மார்ஷின் ஆட்டமிழக்காத 77 (50), கிளென் மக்ஸ்வெல்லின் ஆட்டமிழக்காத 28 (18) ஓட்டங்களுடன் 18.5 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ட்ரெண்ட் போல்ட் 4-0-18-2, அடம் மில்ன் 4-0-30-0, மிற்செல் சான்ட்னெர் 3-0-23-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக மார்ஷும், தொடரின் நாயகனாக வோர்னரும் தெரிவாகினர்.

சா போலோ குரான் பிறீ:

# வெர்ஸ்டப்பனை முந்தி வென்ற ஹமில்டன்

பிரேஸிலின் சா போலோ குரான் பிறீயில், றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பனை முந்தி நடப்பு போர்மியுலா வண் சம்பியனான லூயிஸ் ஹமில்டன் வென்றார்.

கார்களில் மாற்றத்தை மேற்கொண்டமை காரணமாக 10ஆம் இடத்திலிருந்தே நேற்று முன்தினமிரவு பந்தயத்தை ஹமில்டன் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த பிரித்தானியாவின் ஹமில்டனின் சக மெர்சிடீஸ் அணி ஓட்டுநரான வல்ட்டேரி போத்தாஸ் மூன்றாமிடத்தைப் பெற்றார்.




அந்தவகையில், இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் புள்ளிகள் பட்டியலில் 332.5 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பன் உள்ள நிலையில், 318.5 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஹமில்டன் உள்ளதோடு, 203 புள்ளிகளோடு மூன்றாமிடத்தில் பின்லாந்தின் போத்தாஸ் காணப்படுகின்றனர்.

எல்.பி.எல்:

# ஜஃப்னா கிங்ஸின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக முபாரக்

லங்கா பிறீமியர் லீக்கில், ஜஃப்னா கிங்ஸின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக இலங்கையணியின் முன்னாள் வீரர் ஜெஹான் முபாரக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சுழற்பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக இலங்கையணியின் இன்னொரு முன்னாள் வீரரான சச்சித் பத்திரண நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், உதவி மற்றும் வேகப்பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக மரியோ வில்லவராயன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தவிர, களத்தடுப்பு மற்றும் எறிப் பயிற்சியாளராக விமுக்தி தேஷப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கணிணி ஆய்வாளராக ஜி.ஜி.டி நிரோஷன் நியமிக்கப்பட்டுள்ளார்.




உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# சேர்பியாவிடம் தோற்ற போர்த்துக்கல்

கட்டாரில் அடுத்தாண்டு நடைபெறவுள்ள சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உலகக் கிண்ணத் தொடருக்கான ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தகுதிகாண் போட்டிகளில், போர்த்துக்கல்லில் நேற்று அதிகாலை நடைபெற்ற சேர்பியாவுடனான குழு ஏ போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் தோற்றது.



போர்த்துக்கல் சார்பாகப் பெறப்பட்ட கோலை றெனட்டோ சந்தேஸ் பெற்றதுடன், சேர்பியா சார்பாக, டுஸன் டடிச், அலெக்ஸான்டர் மிற்றோவிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். அந்தவகையில், இக்குழுவில் முதலிடம் பெற்ற சேர்பியா உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற, தகுதிப் போட்டிகளில் போர்த்துக்கல் விளையாட வேண்டியுள்ளது.

இதேவேளை, ஸ்பெய்னில் நடைபெற்ற சுவீடனுடனான குழு பி போட்டியில் அல்வரா மொராட்டாவின் கோலுடன் 1-0 என்ற கோல் கணக்கில் வென்ற ஸ்பெய்ன் உலகக் கிண்ணத்துக்கு தகுதிபெற்றது. சுவீடன் தகுதிப் போட்டிகளில் விளையாட வேண்டியுள்ளது.

சூடான்

ஆட்சி கவிழ்ப்புக்கு எதிரான போராட்டத்தில்

# ஐவர் உயிரிழப்பு

சூடானில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 25-ஆம் திகதி ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.

இதனையடுத்து உலக நாடுகள் தமது கண்டனத்தை தெரிவித்து வந்ததோடு நாடு முழுவதும் ஆட்சிக்கவிழ்ப்புக்கு எதிராக மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுவந்தனர்.

இந்நிலையில் அண்மையில் இடம்பெற்ற போராட்டத்தில் ஒருவர் பொலிஸாரின் கண்ணீர் புகைக் குண்டு வீச்சில் மூச்சுத்திணறி இறந்ததாகவும், 4 பேர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தினையடுத்து அந்நாட்டில் பதற்றமான சூழல் காணப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





இஸ்ரேல்

# மின்காந்த அலைகள் மூலம் போர்

எதிரிகளை நிலைகுலையச் செய்வதற்கு புதிய மின்னணு போர் உத்தியை செயற்படுத்த இஸ்ரேல் அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் வாணியல் தொழிற்கழகம் வெளியிட்ட வீடியோ ஒன்றிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது. இத்தொழில் நுட்பமானது எதிரி நாட்டு விமானங்கள் மற்றும் கருவிகள்மீது மின்காந்த அலைகளை ஓர் இடத்தில் குவியக்கூடிய கற்றைகளாக மாற்றுவதாகவும் இதன் மூலம் ரேடார், சென்சார் உள்ளிட்ட அமைப்புகளைச் சீர்குலைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அந்தவகையில் பாதுகாப்புச் செலவை பெருமளவு குறைக்கும் இத்தாக்குதல் அமைப்புக்கு 'பீம்ஸ்' என இஸ்ரேல் அரசு பெயரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

பொலிஸ் நிலையத்தில்

# நிர்வாணப்படுத்தப்பட்ட பெண்

பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட பெண் ஒருவரை, பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மிரட்டி, நிர்வாணமாக்கி நடனம் ஆட வைத்த சம்பவம் பாகிஸ்தானில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள குவெட்டா நகரிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று, குழந்தை ஒன்று கொலை செய்யப்பட்ட விவகாரம் குறித்து விசாரிப்பதற்காக குறித்த பெண் அப்பகுதியில் இருந்த பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டதாகவும், விசாரணையின் போது பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அப் பெண்ணை மிரட்டி ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக்கியதுடன், பாடல் ஒன்றை ஒலிக்கச் செய்து, அங்கிருந்தவர்கள் முன்னிலையில் நடனமாட வைத்தாகவும் அதனை வீடியோ எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் இவ்விடயம் இணையத்தில் வைரலாகவே குறித்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட அவரது குழுவினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

# செய்யாத குற்றத்துக்காக 24 ஆண்டுகள் சிறை



செய்யாத குற்றத்துக்காக நபர் ஒருவர் 24 ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்த சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகாணத்தில் 1995ஆம் ஆண்டு போதைப் பொருள் கடத்தல் விவகாரத்தில் என்பவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் 19 வயதான டோண்டே ஷார்ப் என்பவர் கைது செய்யப்பட்டார்.

மேலும் ஷார்ப் கொலை செய்ததை நேரில் கண்டதாக 15 வயது சிறுமி அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ஷார்ப் சிறையில் அடைக்கப்பட்டார்.

இருப்பினும் தன் மீதான குற்றத்தை முறையாக விசாரிக்கவும், தான் நிரபராதி எனவும் கூறி ஷார்ப் மேல்முறையீடு செய்தார். அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கொலைக் குற்றத்தை நேரில் கண்டதாகத் தெரிவித்த சிறுமி சம்பவம் நடைபெற்ற இடத்தில் இல்லை என்பது தெரியவந்தது.

# பூஸ்டர் தடுப்பூசி ஓர் ஊழல்

"பூஸ்டர் தடுப்பூசி என்பது, ஓர் ஊழல். இதனை உலக நாடுகள் தடுக்க வேண்டும்" என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "வளர்ந்து வரும் நாடுகளில் செலுத்தப்படும் முதலாம் கட்டத் தடுப்பூசியை விடவும் செல்வந்த நாடுகளில் ஒவ்வொரு நாளும் சராசரியாக 6 மடங்கு அதிகமாக பூஸ்டர் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஏழை நாடுகளில் முன்களப் பணியாளர்கள், வயதானவர்கள் உள்ளிட்ட பலருக்கும் இதுவரை ஒரு தடுப்பூசி கூடச் செலுத்தப்படாமல் உள்ள நிலையில், வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஆரோக்கியமானவர்களுக்கும், குழந்தைகளுக்கும் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்படுவதில் எந்த அர்த்தமும் இல்லை" எனக் கவலை தெரிவித்துள்ளார்.

சுவிட்ஸர்லாந்து

# இரவு வேளைகளில் விளக்குகள் ஒளிரக் கூடாது

இரவு வேளைகளில் அதாவது நள்ளிரவு 1 மணியிலிருந்து அதிகாலை 6 மணி வரை மின் விளக்குகள் ஒளிரக் கூடாது என்ற புதிய சட்டம் சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் அமல் படுத்தப்பட்டுள்ளது.

இச் சட்டத்தின் மூலம் மின்சாரம் சேமிக்கப்படுவதோடு Co2-உமிழ்வு மற்றும் இரவு நேர மாசுறுதல் குறைக்கப்படுவதால், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டு இச்சட்டத்திற்கு ஜெனீவாவின் கன்டோனல் பாராளுமன்றம் அண்மையில் அனுமதி அளித்துள்ளது.

எனினும் தீயணைப்பு துறைகள், சுற்றுலா பயணிகள் விரும்பும் இடங்கள், அவசரகால மருத்துவ சேவைகள் போன்ற பகுதிகளுக்கு இச்சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது,

இச்சட்டத்திற்கு நாடாளுமன்றத்தில் 69 பேர் ஆதரவாகவும் 23 பேர் எதிராகவும் வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 16 நவம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.